நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை, தோற்றம் 14.09.1901

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி: 110 பகுதி: 07 ஜூலை-2016

திருவள்ளுவர் ஆண்டு 2047

விலை: ரூ.10



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911



மன்னர் பாஸ்கர சேதுபதி

1868-1903

நான்காம் தமிழ்ச் சங்கம்-மதுரை 14.09.1901 THE FOURTH TAMIL SANGAM

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

## தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | உறுப்பினர் |
| முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன் | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | உறுப்பினர் |
| திரு. துரை கருணாநிதி | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயனன் | உறுப்பினர் |

## செந்தமிழ் கலை மற்றும் ஓரியண்டல் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | செயலாளர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயனன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் து.மாயராசன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் சு.சிவசாமி | உறுப்பினர் |
| பொறியாளர் லெ.சிவக்குமார் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ஆர்.பாலாஜி | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் | உறுப்பினர் |

# பொருளடக்கம்


1. இதழ் மணம் 4

2. தனக்குவமை இல்லாத் தனிப்பெரு நூல் 6
முதுமுனைவர் இரா.இளங்குமரன்

3. திருக்குறள் பொதுஅறம் 10
பேரா. இரா.சதாசிவம்

4. மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா 15
தமிழாகரர் தெ. முருகசாமி

5. வழிகாட்டும் வள்ளுவம் 18
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி

6. தமிழன் அவல் 27
பேரா.கசுத்தூரிஇராமசாமி

7. தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் சங்கஇலக்கிய ஆராய்ச்சிவளம் 30
பேரா.முனைவர் இ.கி.இராமசாமி

8. நற்றிணையில் நீர்வளங்கள் 34
முனைவர் வீ.காந்திமதி
(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

7. சங்கச் செய்திகள் 39

# இதழ் மணம்

அறிஞர் இளங்குமரனார் தொல்காப்பியம் குறித்து "தனக்குவமை இல்லாத் தனிப் பெருநூல்" என்னும் தலைப்பில் தொல்காப்பியத்தின் அடிக்கோட்பாட்டை எடுத்து எழுதுகிறார். தொல்காப்பியம் தொன்மையான நூலாயினும் அது தோன்றியதன் நோக்கம் குறித்து விரிவான செய்திகளை அறிவுறுத்துவது குறிப்பிடத்தக்கது. தமிழ் மரபு பாதுகாப்பு, இலக்கியம் படைப்பதற்குரிய உள்ளீடு, மக்களுக்குப் பயன்படும் மரபு வழக்கு இவற்றை வலியுறுத்தும் ஆசிரியர் அதற்குரிய எடுத்துக்காட்டுகளையும் நமக்கு மரபு வழி நின்று விளக்குவது படித்து இன்புறத்தக்கது. புற்றீசல்போல நூல்கள் தோன்றி மறைகின்றன. பொழுதுபோக்கின் பொருட்டு வாங்கிப்படித்துவிட்டு தூக்கிப் போடுகின்றனர். படிப்பவருக்கும் யாதொரு பயனும் இல்லை; நல்ல பழக்க வழக்கங்கள், ஒழுகலாற என எதையும் அந்த நூல்கள் கற்றுத்தருவதில்லை. ஆனால் அவையும் விலைபோகின்றன. ஆனால் அவை காலத்தை எதிர் கொள்வதில்லை; தோன்றி மறையும் தன்மையன.

தொல்காப்பியம் நிலையான மரபுகளை வலியுறுத்தி அவை பேணப்பட வேண்டியதன் இன்றியமையாமையை எடுத்தியம்புவதன்வழி நிலையான உண்மைகளை அறிவுறுத்துகின்றது. படைப்பிலக்கிய ஆசிரியர்கள் கற்க வேண்டிய செய்திகளை மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் வலியுறுத்துகின்றனர். அவற்றை ஆசிரியர் தொல்காப்பியர் "நாடக வழக்கிலும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலநெறி வழக்கு" எனக் கற்பனையும் நடப்பியலும் இலக்கிய உத்தியாக ஆசிரியர் எடுத்துரைப்பது மிகப் பழங்காலந் தொட்டு இலக்கிய நெறிமுறைகள் வகுக்கப்பட்டு வந்துள்ளதைத் தெளிவுபடுத்துகிறது. அதனால் ஆசிரியர் தொல்+காப்பு+கியம் எனப் பிரிந்துரைத்து விளக்கும் பாங்கு எளிதில் நம்மை உண்மை உணர வைக்கிறது. தொல்காப்பியம் காலத்தை வென்று நிற்கும் உண்மைகளை உணர்த்தும் படைப்பாளிகளின் கையேடு என்பதை கட்டுரை ஆசிரியர் உணர்த்தும் போக்கு இன்புறத்தக்கது. வாசகர்கள் கற்றுப்பயன் பெறவேண்டுகிறேன்.;

'திருக்குறள் பொது அறம்' என்ற தலைப்பில் பேரா. இரா.சதாசிவம் எழுதியுள்ள கட்டுரை திருக்குறள் மத நூலன்று. அது மனிதநூல் எனக் கூறி வாழ்வியலுக்கான தத்துவ நூலாக பரிமாணம் அடைவடை எடுத்துக் காட்டியுள்ளார். அறம் என்பது ஒழுக்கம் சார்ந்த பண்பாகும் எனக் குறிப்பிடுவதோடு 'துக்கம்' என்பதன் இயல்பினையும் அது மனிதனிடத்தில் உண்டாக்கும் தேவையற்ற மனப்பிறழ்வினையும் கூறி அதனைக் குற்றமாகச் சுட்டிக்காட்டியுள்ள பாங்கு சிறப்புடைத்து. 'சிவிகை' செல்வச் சிறப்பினைக் குறிப்பது எனினும் சுமத்தல் என்ற வறுமை நிலையினையும் குறிப்பிடுவதைச் சான்றுடன் விளக்கியுள்ளது சிறப்பு.

அன்பின் பெருமையினையும் அது இன்பத்தினை வளர்க்கும் கருவியாக உள்ளதையும் தெளிவுபடக் கூறி, மனிதன் தனக்குத்தானே குற்றம் செய்து கொள்ளும் தவறான சேர்க்கைளில் ஈடுபடுவதை வள்ளுவரின் வழிநின்று கடிந்துரைக்கின்றார். தியானம், சமாதிநிலை என்ற மெய்ப்பொருளாரின் தத்துவங்களுக்குத் துவக்கமாகத் 'துறவறவியல்' இருப்பதனைத் தெளிவுபட வைக்கின்றார். பற்றறுப்பது மிக முக்கியம் என்பதை இம்முக்கியத்துவம் வாய்ந்த கட்டுரையில் விளக்கியுரைத்திருப்பது அருமையும் பெருமையும் உடைத்து.

தமிழாகரர் தெ.முருகசாமி, 'மூர்க்கனும் முதலையும் கொண்டதுவிடா' என்ற கட்டுரையினை எழுதி தம் நுண்மான் நழைபுலத்தினைத் தெளிவுபடுத்து கின்றார். நன்னூலில் இடம்பெறும் கருத்து விளக்க மேற்கோளினை எடுத்துக்கொண்டு அதனை சொல்லின் அடிப்படையிலும், விகுதியின் அடிப்படை யிலும் தெளிவுபட வைக்கின்றார். ஒருமைச்சொல் பன்மையுடன் சேர்தல் குறித்து வினா எழுப்பி அதற்கு விடை காணும் பாங்கு சிறப்புக்குரியது. மூர்க்கன் என்ற உயர்திணை ஆண்பாலுக்குரிய பெயரும் முதலை என்ற அஃறிணைப் பெயரும் ஒரே தன்மையுடன் பயன்படுத்தப்பட்டிருப்பது பொருந்துமா? என்ற வினாவை எழுப்பி அதற்கு நன்னூலின் நூற்பாவினையே சான்றாக்கி 'மாவும் மாக்களும் ஐயறிவினவே' என்ற தொல்காப்பிய முடிவினைத் தக்க இடத்தில் எடுத்துக்காட்டி விளக்கியிருப்பது ஆய்வின் 'எழுதுதல் முறைக்குச்' சான்றளிக்கின்றது.

பேராசிரியர் இரா.மோகன், நிர்மலாமோகன் இணையரால் எழுதப்பெற்ற 'வழிகாட்டும் வள்ளுவம்' என்ற நூலினை அறிமுகப்படுத்தி பேரறிஞர் க.சி.அகமுடைநம்பி கட்டுரை வரைந்துள்ளார். இதில் ஆல்பர்ட் சுவைட்சர் கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வள்ளுவர் உடன்பாட்டுச் சிந்தனை யாளர் என்ற மரபினைக் கொண்டவர் என்பதை நூலாசிரியர்கள் நிறுவியுள்ளனர் என்பதை நயம்பட உரைக்கின்றார். உலகப் பெருங்கவிஞர்களின் சிந்தனை மரபுகளும் திருவள்ளுவரின் சிந்தனை மரபுகளும் நேர்க்கோட்டில் பயணிப்பதைக் குறள்வழி ஆசிரியர்கள் எடுத்துரைத்துள்ளது சுவைதரக் கூடியதாகும். 'காமத்துப்பாலை நாட்டுப்புறக் காதல் பாடல்களுடன் ஒப்பிட்டு எழுதியுள்ள கட்டுரை தமிழாய்விற்கு முதன்மையாகவும், வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது.

அவலின் வரலாற்றையும் அது தமிழர் பண்பாட்டில் பெறும் இடத்தையும் விளக்குவதாக பேரா.கசுத்தூரி இராமசாமி அவர்களின் கட்டுரை அமைகின்றது. தமிழர்களின் உணவாக இருந்த அவல் பழமைச் சிறப்புடையது. கிருஷ்ணரைச் சந்திக்கச் சென்ற குசேலர் தமது பரிசாக அவலைக் கொடுத்ததாக வரலாறு உண்டு என்பதையும் தமிழில் அவல் பற்றி உள்ள பழமொழிகளையும் எடுத்துக் காட்டி பழந்தமிழ் இலக்கியங்களின் வாயிலாக அது தமிழர் உணவே என்பதை நிறுவியிருக்கின்றார். தமிழரின் உணவான அவல் அமெரிக்கா போன்ற அயல் நாடுகளுக்குச் சென்று வேறொரு வடிவம் எடுத்து இசை சத்தானவை என்ற வெற்று முழக்கங்களோடு விற்பனைக்கு வருவதனைச் சாடுகின்ற வகையில் தம் கட்டுரையினைத் தந்திருக்கின்றார்.

பேரா.முனைவர் இ.கி.இராமசாமியால் எழுதப்பட்டுள்ள தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரால் எழுதப்பட்ட 'சங்க இலக்கிய ஆராய்ச்சி வளம்' என்ற கட்டுரை தெ.பொ.மீ.யின் பன்முக ஆளுமையை எடுத்துக்காட்டும் விதமாக அமைந்துள்ளது. தமிழ் இலக்கிய அறிஞர்களுள் தெ.பொ.மீ.யின் தனித்திறன், மொழிச் சீர்திருத்தம், சமநிலை போன்ற செய்திகள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளதை ஆராய்ந்து கூறுவதை கட்டுரையாளர் தெளிவாக எடுத்துரைக் கின்றார். அவரின் மதுரைக் காஞ்சி ஆராய்ச்சியில் சமநிலைக் கோட்பாட்டினை ஒப்பாய்வு செய்தல், காஞ்சித் திணையின் தனித்திறன், அயல்நாட்டு வாணிபத் தொடர்பு, வரலாற்றுத் தகவல்கள் போன்றவற்றை எடுத்துரைத்து அவர் பல்கலைச் செல்வராக விளங்குவதை எடுத்துக்காட்டுகின்றார். நற்றிணை பெயர் ஆராய்ச்சி பற்றிய அவருடைய ஆராய்ச்சி மேலாய்வுக்கு இடம் தரும் களமாக விளங்குவதை கட்டுரையாளர் திறம்பட எடுத்துரைப்பது சிறப்பிற்குரியது.

# தனக்குவமை இல்லாத் தனிப்பெரு நூல்

முதுமுனைவர் இரா. இளங்குமரன்

ஆசிரியா தம்மிடம் பயில வரும் மாணவர்க்கு நுவன்று நுவன்று வந்த நுவல்வே நூல் எனலாயது. ("நூலே நுவல்வோன் நுவலும் திறனே" - நன்னூல்) அவ்வாறு மனங்கொள நுவன்றது இலக்கணமே ஆதலால்' நூல்' என்பது இலக்கணத்தையே குறித்தது.

நுவல்வதற்கு வாய்ப்பாக எடுத்துக்கொண்ட பா, நூற்பா;

நூற்பா ஓரடிச் சிறுமையாகவும் இருக்கலாம்.

ஓரடிச் சிறுமையிலும் 'இருசீர்' அடி அளவிலும் இருக்கலாம்.

"*வல்லெழுத் தென்ப கசட தபற*" - தொல். *19*

இஃது ஓரடி நூற்பா.

'*வையே கூர்மை*' - தொல். *870*

இஃது, இருசீர் நூற்பா.

இலக்கணத்தை முதற்கண் குறித்த 'நூல்' என்னும் சொல் பின்னே இலக்கியம் முதலியவற்றுக்கும் ஆயது.

தொல்காப்பியம் கூறும் எழுவகை யாப்பில் முதற்கண் நிற்பது 'நூலினான" என்பது (1421)

நூற்பாப்போலவும், வேறு சில கட்டொழுங்கு அமைத்தும் ஆசிரியர் கற்பிக்கக் கையாண்ட பா, ஆசிரியப்பா' அதன் ஒலி மயில் அகவுதல் போல் இருந்ததால் அகவற்பா என்ற பெயரும் அதற்கு உண்டாயது. அதன் சிற்றெல்லை மூன்றடி என்றனர். பேரெல்லை ஆயிரம் அடி என்றனர். அதற்கு மேலும் பாடப்பட்ட அகவலும் பின்னே உண்டாயிற்று!

தொல்காப்பியம் நூற்பாவால் அமைந்தாலும், அதனை யாப்புள் தலைப்பட வைத்தாலும் அது 'நூல்' எனப்பெயர் கொள்ளாமல் 'தொல்காப்பியம்' என்றே பெயர் பெற்றது.

பழமையான இலக்கிய இலக்கண மரபுகளையும், வாழ்வியல் மரபுகளையும், மக்கள் வழக்குகளையும் தொகுத்து, அழிந்து போகவிடாமல் காக்கும் நூலாகச் செய்ததால் 'தொல்காப்பியம்' எனப்பெயரிட்டார். தொல் + காப்பு + இயம் = தொல்காப்பியம்.

மொழிவழக்கையும் மக்கள் வழக்கையும் காத்தபெருமையால் அவர் பிறந்த ஊர் காப்பியக்குடி எனப்பெயர் பெற்றது. குமரிமாவட்டத்தில் அமைந்துள்ள அவ்வூரில் தொல்காப்பியர்க்குச் சிலை எடுத்து அரிய வளாகமும் உண்டாக்கியுள்ளனர். மண்ணின் வளம் காப்பவர்கள்!

**எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்** என மூன்று அதிகாரங்களைக் கொண்டது தொல்காப்பியம்.

**எழுத்தும் சொல்லும்** மட்டுமே உலக மொழிகள் எல்லாமும், இலக்கணம் என இரண்டு கொள்ள, **பொருளதிகாரம்** என வாழ்வியல் இலக்கணமும் கொண்டது தொல்காப்பியம்.

வாழ்வியலில் வீட்டு வாழ்வு, வெளிவாழ்வு **(அகவாழ்வு, புறவாழ்வு)** என்பவை உண்டு அல்லவா! அவற்றை விரியக் கூறுகிறார்.

பேசும் கிளியையும், பாடும் குயிலையும், ஆடும் மயிலையும் கண்டு களிப்புறும் மக்களுக்கு, அக் களிப்பைத்தாமும் உண்டாக்கிக் கொள்ள ஆர்வம் ஏற்படும் அல்லவா!

அதனால், அவ்வாழ்வைக் **கூற்று** (உரையாடல்) வகையாலும், **திணை துறை** வகையாலும் வகுத்துக்காட்டினார் தொல்காப்பியர்.

அறிந்ததைக் காட்டி அறியாததை விளக்கும் வழக்கத்தை எண்ணி **உவமை** இயல் வகுத்தார்.

ஆடல் பாடல் கூத்து குலவல் என வந்தால், அகஎழுச்சியைப் புற உறுப்புகளாக முகம், கண், கை, கால், குரல் என்பவற்றால் வெளிப்படுத்தி, காண்பவரும் கேட்பவரும் மகிழவுறச் செய்யவேண்டும் அல்லவா! அதற்காக **மெய்ப்பாட்டியல்** என ஒன்றை பகுத்துத் தமிழ் **'செந்தமிழ்'** என்றாலும் **முத்தமிழ்க்கூறும்** கொண்டது என்பதை நிலைநாட்டினார்.

ஆடிப் பாடிக் கேட்டும் கண்டும் கலைந்து போய்விடாமல், முந்தையர் தேட்டுகளையெல்லாம் பிந்தையர் காலமெல்லாம் அறிந்து வளமாக்கிக் கொள்வதற்காக, அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் பாவகைகளையும் நூல்வகைகளையும் விரிவாக விளக்கினார்.

ஒருமொழி, வற்றாத உயிரோட்ட ஆறு போல என்றும் விளங்கவேண்டுமானால், ஏட்டிலே மட்டும் இருந்துவிடல் ஆகாது; நாட்டுமக்கள் அனைவர் நாவிலும் நடமிடல் வேண்டும். அம்முறை வழிவழியே மாறாமல் வழங்குவதற்கு முன்னவர் மரபைப், பின்னவர் கட்டாயமாகப் போற்ற வேண்டும் என்பதற்காக நூன்மரபு, மொழிமரபு, விளிமரபு என்று மரபுகளைக் கூறியவர், நூல் நிறைவில், 'மரபியல்' என்று ஓர் அரும்பெரும் இயலை வைத்தார். மரபியலைத் தொடங்கும் போதே,

*"மாற்ற அரும் சிறப்பின் மரபியல்" (1500)*

என்றார். மரபை மாற்றினால் என்ன ஆகும்? என்றால்,

*"மரபு நிலை திரியின் (மாறின்) பிறிது பிறிது ஆகும்" (1591)*

என்றார். தப்பித்தவறி உரையாடலில் அறியாமல் மரபு நிலை பிழைபட நேர்ந்துவிட்டாலும்,

*"மரபு நிலை திரிதல் செய்யுட்கு இல்லை" (1590)*

என்றார். செய்யுட்கு என்றால் நூல்வகைக்கு என்பதாம்.

பேச்சில் மரபு தவறினாலும் எழுத்தில் மரபு மாறாமை வேண்டும்! ஏனெனில், எழுத்து காலமெல்லாம் நின்று பலப்பலரையும் மரபுநிலை மாறச் செய்து மொழிக்கேடாக முடிந்துவிடும்.

*யாராவது 'கோழிக்குட்டி' என்றும்*

*'ஆட்டுக்குஞ்சு' என்றும்*

சொன்னால் நமக்கு, அவர் முன்னாலேயே நகைப்பு ஏற்பட்டுவிடாதா? அணிலை **'மூவரி அணில்'** என்றார் தொல்காப்பியர் (1505) நம் கண்காண அணில் அப்படித்தானே தோன்றுகிறது.'

**'அணில் வரிக்காய்'** என இலக்கியத்தில் உள்ளது'

நாம் கண்டாலும் நாளும் தின்றாலும் 'அணில் வரிக்காய்' என்பதை இலக்கியத்தில் அறிந்தவர்கள் அல்லாமல் பிறர் அறியார். ஏன்? அச்செய்யுள் வழக்கு, மக்கள் வழக்காக வழங்கப்படவில்லை!

அக்காய் எது என அறிய வேட்கை உண்டாகும்! ஏன், அறிந்து கொள்ளும் ஆவல்' அவ் வாவல் நீங்காமல் இருந்திருந்தால் நாம் எளிதாய் அறிந்து கொண்டு இருந்திருப்போம்.

வெள்ளரிக்காய் தான் அது. வெள்வரிக்காய், வெள்ளரிக்காய் என ஆயது. பச்சை நிறக்காயில் இருந்த வெள்ளைவரி கவர்ந்தது' ஆதலால் வெள்வரிக் காய் எனப்பட்டது. 'அரி' என்பதும் 'வரி' என்பதே! 'அரிவரி' என்பது தமிழ் நெடுங்கணக்கு.

திருக்குறளில்,

> **"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
> **நற்றாள் தொழாஅர் எனின்"**

என்பது கடவுள் வாழ்த்தில் இரண்டாம்குறள்.

'வால்', தூய்மை, வெண்மை' வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை' 'வாலறிவன்' தூய்மையமைந்த - மாசில்லாத - அறிவன். வாலியன், வாலியள் என்பவை இல்லறம் கொள்ளும் பருவம் வாய்ந்தவர். வால்வளை வெண்சங்கு. வால் என்பதற்கு வெண்மைப்பொருள் இருத்தலால் வெள்ளரிக்காயை **'வால்வரிக்காய்'** என்றும் வழங்கினர். மேலும் சுவையூட்ட விரும்பியவர் **'அணில்வரிக்காய்'** என்றனர்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வால்வரிக்காய் என்றும், அணில் வரிக்காய் என்றும் வழங்கப்பட்ட காய் இன்று வெள்ளரிக்காய் என வழங்குகிறது.

மூவரி அணில் இன்னொரு கொடையை வழங்கியது. ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வரும் பாடல் வரிப்பாடல் என இலக்கணம் உண்டாக்கவும், இலக்கியம் படைக்கவும் உதவியது. மூன்றடுக்கிய கலித்தாழிசையும் ஆயிற்று!

தொல்காப்பியர் குரங்கைக் குறிப்பிடுகிறார்

> *"கோடு வாழ் குரங்கு'* *(1512)*

என்பது அது. இன்றும் கோடுகளிலே - மரக்கிளைகளிலே - தானே குரங்கு வாழ்கிறது.

தொல்காப்பியர், தன்னைப் பற்றிக் கூறியது குரங்குக்குத் தெரியாது. தமிழ் கற்றவர்க்குத் தெரிந்ததால்,

> *"மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ*
> *உன்னைஅறிந் தோதமிழ் ஓதினேன் - என்னை*
> *விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ*
> *குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு?"*

எனக் கம்பர் பெயரால் ஒருதனிப்பாடல் எழுந்தது.

கொம்பு வளைதலால் ‘கோடு’ எனப்பட்டது.

**‘கணைகொடிது யாழ்கோடு செவ்விது”** என்பது **திருக்குறள் (279)**

இதனால் மரபு போற்றப்படல் வேண்டும்: இடையீடுபடுதல் ஆகாது இடையீடு பட்டால் வழக்கிழந்து போகும். நம் சொற்செல்வம் குறையக் குறைய மொழிவளம் குறைதலாகும்!

பணம் குறைந்தால் பதைக்கிறது மனம்!

சொற் குறைந்தால் - சிதைந்தால் - அந்தப் பதைப்பு ஏற்படுவது இல்லை! ஏன்? அதன் அருமையை நாம் உணரவில்லை? சொல் என்பதன் பொருள் நெல்! அது தருவது சோறு அன்று, உயிர்! சொல், மொழியின் உயிர்!

சொல்லும் பொருளும், ‘அப்பனும் அம்மையும்' என்பது **சிவனியம்.**

“சொல் · இறைவனோடு இருந்தது; இறைவனாக இருந்தது” என்பது **விவிலியம்!**

*"பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப்பசுங் கொண்டலே"*

என்பது கொஞ்சு தமிழ்க் குமரகுருபரர் வாக்கு!

‘மரபு’ ‘மரபு’ என்றோம்! மரபு என்றால் என்ன?

சுவைமிக்கதோர் மாம்பழம்! அதனை விரும்பி உண்கிறோம்! உண்டதோடு நில்லாமல் அதன் கொட்டையைப் பக்குவப்படுத்திப் பதியன்போட்டு முளைக்க வைக்கிறோம். அது வளர்ந்து, பூவெடுத்து, காய்க்கிறது; கனிகிறது. ஒரு கொட்டை, பருவந்தோறும் ஐந்நூறு ஆயிரம் எனக் காய்க்கிறது. ‘மரம்’ வழி வழியாகக் கனி தந்தமைபோல் வழிவழியாகக் காக்கப்படுவதே ‘மரபு’ ஆகும்!

இயற்கையாகிய மரம் செடி கொடிகள் தம்மைத்தாமே காத்தும் பெருக்கியும் கொள்ளும்! மண்புழு முதல் எவ்வுயிரிகளும் மாந்தர் அழிவு செய்யாமல் இருந்தால், தங்களைத் தாங்களே காத்துப் பெருக்கிக் கொள்ளல் இயற்கை. ஆனால் மொழி, தம் கருத்துப் பரிமாற்றம் கருதி மாந்தரால் சைகை மொழி முதலாகச் செம்மொழியாகிச் சிறந்தோங்குமாறு, ‘ஆக்கமும் கேடும்’ மாந்தர் மரபு காத்துப் போற்றுதலிலே உள்ளன என்பதை அறிவறிந்த மாந்தரும் கற்பவரும் கடைப்பிடியாகக் கொள்ள வேண்டும் என்பது கட்டாயமாம்!

# திருக்குறள் பொதுஅறம்

பேரா. இரா. சதாசிவம்

திருக்குறள் உலகம் தழுவிய உண்மைகளைப் பேசுகிறது. திருவள்ளுவருக்கு நாடு, மொழி, இனம், சாதி, மதம் ஆகிய பிரிவினைகள் கிடையாது. இவைகளுக்கு அப்பாற்பட்டு உலக மக்கள் அனைவரையும் வேற்றுமையின்றி ஒன்றாகப் பாவிக்கும் கொள்கை உடையவர். திருக்குறளை மதங்களுக்குள் கொண்டுவந்து மதம் சார்ந்த கருத்துக்களைத் திருக்குறள்மேல் ஏற்றிப்பேசுவது உரையாசிரியருடைய காலம், இடம், மதம் சார்ந்த தாக்கமேயாகும். எப்பொழுதும் சூழ்நிலையினுடைய தாக்கமும் தன்னுடைய பாரம்பரிய பழக்கவழக்கங்களின் சிந்தனைத்தாக்கமும் தாம் எடுத்துக்கொண்ட மெய்ம்மைகளை உணர்வதில் தலையிடாமல் புறம்தள்ளுகிற எச்சரிக்கை கல்வியாளருக்கு இருத்தல் வேண்டும்.

இந்திய சமூகத்தில் மதம் சார்ந்த சடங்கும் புராண இதிகாசக்கதைகளின் தாக்கமும் தாம் வாழ்கின்ற சமுதாயச் சூழல் ஆகியவற்றின் உந்துதலும் வாழ்க்கை சார்ந்த உண்மைகளை அதன் இயல்பில் ஆராயாமல் பிரிதொன்றின்மேல் ஏற்றி அதற்கு விளக்கம் தருகிற இயல்பு சமயங்களின் தாக்கமாகும்.

அறம், பொருள், இன்பம் சமுதாயம் சார்ந்த நடைமுறைகளாகும். அவை மனத்தாலும், உடல் உழைப்பாலும் உருவாக்கப்படுகின்ற செயற்பாடுகளாகும். அறம் என்பது ஒழுக்கம். ஒழுக்கம் மனம்சார்ந்த பண்பாகும். மனத்தூய்மையே ஒழுக்கத்தின் முதற்படியாகும். திருவள்ளுவர் மனத்துக்கண் மாசிலனாதல் என்பார். அதுவே அறம் என்று கூறுகிறார். அதன் மறுதலையாகிய குற்றம் துக்கம் தரும் என்கிறார். துக்கம் என்பது திருக்குறளில் 'ஆகும்' என்ற சொல்லால் சொல்லப்படுகிறது. மனமாசும் அதன்வழி ஏற்படுகின்ற அறப்பிறழ்வும் துக்கத்தின் ஊற்றுக்கண்ணாகும். இது மக்கள் தங்கள் வாழ்க்கையில் நாள்தோறும் சந்திக்கின்ற உண்மையாகும். மனக்குற்றத்தால் ஏற்படுகின்ற குற்றச்செயல்கள் துக்கம் தருகிறது என்பதை நாம் எண்ணுவதில்லை. அது நமக்கு பழக்கமாகிவிட்டது. இது ஒரு மனப்பிறழ்வினால் ஏற்பட்ட அடிமனக் குற்றமாகும். ஆனால் உரையாசிரியர் பரிமேலழகர் 'ஆகுலம்' என்பதை ஆரவாரம் என்று சொல்லித் திருக்குறளின் அடிநாதத்தை எண்ணிப் பார்க்காமல் விட்டுவிட்டதாகவே தோன்றுகிறது.

*"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை."*

என்ற திருக்குறளில் சிவிகையும் அதைப் பொறுப்பவனும் கவிஞனின் படிமங்களே ஆகும். சிவிகை என்பது செல்வச் செழிப்பைக் காட்டுவது. சிவிகை சுமத்தல் என்பது வறுமை நிலையை காட்டுவதாகும். ஈண்டு உயர்வு தாழ்வு என்பது பொருள் குறித்த வெளிப்பாடாகும். பொருள் குறித்த வெளிப்பாட்டிற்கும் பாவப் புண்ணியங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துவது முறையான சிந்தனையாகாது. அறவழியில் நிற்காதவர்கள் பொருள் ஈட்டி மகிழுந்துகளில் பயணம் செய்வதைப் பார்க்கிறோம். அறநெறியில் நிற்பவர்கள் தங்கள் உழைப்பும், வாழ்வும் இயற்கை நெறியில் அமைந்து இனிய எளிய வாழ்க்கை வாழ்வதையும் பார்க்கிறோம். பெருக்கமும் கேடும் அறத்தின் பாற்பட்டது அல்ல என்பதை திருவள்ளுவர்,

**"கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்து**
**கோடாமை சான்றோர்க்கு அணி"**

என்று கூறுவதைப் பார்க்கிறோம். இதன்கண் கேடும் பெருக்கமும் ஒரு பொருளாகக் கருதத்தக்கதல்ல. மனத்தில் சலனம் இல்லாமல் அறநெறி நிற்றலே உயர்ந்தோர்க்கு ஆளுமை என்கிறார். ஆசிரியர் பரிமேலழகர் வடநூலாருடைய கல்வித் தாக்கத்தால் ஆகமங்களில் சொல்லப்பட்ட ஆகமப் பிரமாணங்களையும், ஆகமப் பிரமாணங்களை காட்டி சிவிகை பொருத்தானோடு ஊர்ந்தான் இடை என்பதால் காட்சியளவையும் (பிரத்தியச்ச பிரமாணமும்) காட்டி பாவபுண்ணிய பயன் என விளக்குவது பரிமேலழகருடைய வடமொழி நூற்கல்வியின் தாக்கமேயாகும். உரையாசிரியர் கவிதை நயமிக்கப் பாடலை தான் வாழ்ந்த சமயச் செல்வாக்கின் தாக்கத்தால் பொருளில் மயக்கத்தை (Ambiguity) ஏற்படுத்துகிறார். இது இந்தியச் சமுதாயத்தின் சிந்தனைப் போக்கைக் காட்டுகிறது.

பொருளாதாரம், உடல் நலம், தொழில் சார்ந்த அனைத்துச் சமுதாய கோட்பாடுகளைக் கூட பாவபுண்ணிய அடிப்படையில் நோக்கி மதங்களின் தாக்கத்தால் சிந்தனைப் பிறழ்வுடையவர்களாக வாழ்கிறார்கள். இடைக்காலத்தில் இந்திய சமூகத்தில் சமயங்கள் தங்களுடைய விளம்பரச் செல்வாக்கினால் அறம் என்பது பொதுஅறமாக கொள்ளப்படாமல் மதம்சார்ந்த பாவபுண்ணியங்களாக மக்கள் சிந்தனையில் நுழைந்துவிட்டன. இதன் விளைவாக உரையாசிரியர்களும் சடங்குகளையும் இதிகாசப் புராணக் கதைகளையும் புகுத்தி உண்மை காண முடியாத ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர். திருவள்ளுவர் இதற்கு அப்பாற்பட்டவர் என்பதை உணர்ந்து கொண்டால் மதங்கள் இல்லாத ஒரு மறுவாசிப்பு திருக்குறளுக்குத் தேவைப்படும்.

திருவள்ளுவர் மனத்துக்கண் மாசிலனாதல் என மனத்தூய்மையை வலியுறுத்தினார். அந்தத் தூயமனத்தில் எத்தகைய குற்றங்களும் புகுந்துவிடக்கூடாது என்பதையும் பற்பல குறள்களில் வெளிப்படுத்துகிறார். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம் எனவும் குறிப்பிடுகிறார். தூய மனத்தில் இருக்கக்கூடாத குற்றங்கள் இவையென வலியுறுத்துகிறார். இத்தகைய குற்றங்களை மனத்திலிருந்து நீங்கினால் அந்த

மனத்தில் அன்பு மலரும். அந்த அன்பே தனக்கும் சமூகத்திற்கும் பாதுகாப்பாகும்; அதுவே உயிர் தளிர்ப்பதற்குரிய நீராகும். அன்பு இல்லாத வாழ்க்கை வெயிலில் காயும் புழுவோடு ஒப்பதாகும்.

கதிரவன் தன்னியல்பில் காய்கின்றான். அது உலகியலை பாதுகாக்கிறது. மரம், செடிகொடிகளையும், உயிரினங்களையும் வளர்க்கிறது. ஆனால் அதே வெயிலில் எலும்பு இல்லாத உயிர்கள் தன்னியல்பில் அழிகின்றன. அதுபோல அன்பு இல்லாத உயிர்கள் அன்புஇல்லாத தீமைக்குற்றத்தினாலே அழிகின்றன. உயிர் வாழ்க்கைக்கு மனத்தூய்மையும் அதன்கண் ஊற்றெடுக்கின்ற அன்பும் இன்றியமையாத தேவைகளாகும். இவ்வன்பின் வளர்ச்சியே, கதிரவனுடைய ஒளி உலகம் முழுவதையும் தழுவுவதைப் போல, அன்பின் பெருக்கம் உலகத்தை துன்பத்தினின்று விலக்கி உலக வாழ்வை பெருகச்செய்கிறது. இவ்வன்பின்மை உலக வாழ்க்கையைத் துன்பத்துள் உய்க்கிறது. இவ்வன்பை உணர்தற்கு ஆழ்ந்த கல்விப் புலமை வேண்டும். இடைவிடாத கல்வி முயற்சியை ஆசிரியர் திருவள்ளுவர் 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' எனக் குறிப்பிடுவர். அறியாமையில் இருந்து விடுபடுவது விடுவிப்பது கல்வியின் முயற்சியாகும். அப்பொழுது நாம் புதியபுதிய உண்மைகளைப் பார்க்கிறோம். நம் குறைகளை நீக்குகிறோம். அப்பொழுது நமக்கு ஏற்படுவது இன்பப் பெருக்கமாகும். இன்பப் பெருக்கத்திற்கு கல்வியும் அறிவு முயற்சியும் தேவைப்படுகிறது என்பது அறிவியல் சார்ந்த உண்மையாகும். இவ்வறிவியல் உண்மை எவ்வளவு நுட்பமானது என்பதை இன்பத்துப்பாலுள்

***"அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்***
***செறிதோறும் சேயிழை மாட்டு"***

என அறிவு இன்பத்தைத் தருதல் போல காதல் வாழ்வில் இன்பம் தருகிறது என அறிவையும் அன்பு நிறைந்த காதல் வாழ்வையும் ஒப்பிட்டுக் காட்டியிருப்பது அறிவின் முதிர்ச்சியையும் அன்பின் ஆழத்தையும் காட்டுவதாகும்.

திருவள்ளுவர் மக்கள் தனக்குத் தானே செய்துகொள்ளும் குற்றமாக பெண்வழிச்சேறல், வரைவின் மகளிர் தொடர்பு, கள் உண்ணுதல், சூது, பேருண்டி ஆகிய ஐந்தையும் குறிப்பிடுகிறார். உடம்பு பெற்றவன் நெடிது வாழ்வதற்கு அளவறிந்து உண்ணுதல் அறிவியல் உண்மையாகும். இதனைத் திருவள்ளுவர் மருந்து என்னும் அதிகாரத்தில் ஏறக்குறைய ஏழு திருக்குறளில் வலியுறுத்துவார். உயிர் இன்புறுவதற்கு உடல் நலம் இன்றியமையாதது. அதனை உடலோம்பும் உத்தியாக மருந்து என்னும் தலைப்பில் வலியுறுத்துகிறார். அதனோடு அமையாது இன்பத்துப்பாலுள்ளும்,

***"உணலினும் உண்டல் அறல்இனிது காமம்***
***புணர்தலின் ஊடல் இனிது"***

என மேலும் வலியுறுத்துகிறார். இன்பம் என்பது காமத்துப்பாலின் தனிவுடைமை என்றாலும் திருவள்ளுவர் அதனுள்ளும் அறிவுதரும் மேம்பாட்டையும் உடலோம்பல் மேம்பாட்டையும் வலியுறுத்தியிருப்பது முப்பாலுள்ளும் ஆசிரியர் வலியுறுத்துவது அறமும் அதனை மேம்படுத்தும் அறிவும் அதற்கு உறுதுணை

யாக இருக்கின்ற உடல் நலமும் அவருடைய சிந்தனை மையமாக அமைந்துள்ளது. திருவள்ளுவர் வாழ்க்கையைச் சிந்திக்கிறார். அதற்குரிய நடைமுறைக் கோட்பாடுகளாகிய அறத்தைச் சிந்திக்கிறார். பாவ புண்ணியங் களோடு பொருளாதார முயற்சியை கலந்து பேசுவது அவருடைய நோக்கமல்ல; அது இடையே ஏற்பட்ட நம்முடைய சிந்தனைப் பிழையாகும். திருவள்ளுவர் மிகப் பழங்காலத்திலேயே அறம் வாழ்க்கையின் அடிப்படைத் தேவையென்பதை உணர்த்திய பெரும்புலவர். அவர் மதச்சார்பற்றவர். அவருடைய திருக்குறளில் இன்னொரு பரிமாணமும் இருக்கிறது. அது மனம் கடந்த நிலையாகும்.

மனங்கடந்த நிலையை தியானம், சமாதியென மெய்ப்பொருளாளர் கூறுகின்றனர். ஆசிரியர் திருவள்ளுவர் அதனை அளவின்கண் நின்றொழுகல் என துறவறவியலில் 286வது குறளில் குறிப்பிடுகிறார். அதற்கு உரை சொல்லுகின்ற உரையாசிரியர் பரிமேலழகர் உயிர் முதலியவற்றை அளத்தலாவது அதற்கு உபாயமாகிய யோக ஞானங்களையும் அவற்றான் அஃது எய்தும் வீட்டினையும் அளந்து உள்ளவாறு அறிதல்; இதனை ஆருகதர் தருமத்தியானம் என்பர். அதற்கு ஏற்ப ஒழுகுதலாவது அவ்விலக்கப்பட்டனவற்றுன் தீயனவற்றின் நீங்கி நல்லனவற்றின் வழிநிற்றல் என உரையெழுதுவார்.

ஈண்டுத் தியானம் என்பது ஒழுக்கநெறி நின்று மனவோட்டத்தை புரிந்து அது செயலற்ற நிலையாகும். இத்தியானம் நினைப்பின் முனைப்பு நீங்குதலேயாகும். நான் என்பது அறும்போது நினைப்பு நின்றுவிடும். இதுவே தியானமாகும். இது வாழ்நாள் முழுவதும் தருமநெறியில் நின்று கடைப்பிடிக்கும் தவமுயற்சியென்பர். அதனால் ஆருகதர் இதனைத் தருமத்தியானமென்பர். இன்னும் ஒரு குறளில்,

*"தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய*
*மன்னுயிர் எல்லாம் தொழும்"*

இக்குறளுக்கு உரைகண்ட மணக்குடவர் தன்னுயிரானது தான் என்று எண்ணும் கருத்து அறப்பெற்றவனை ஒழிந்தனவாகிய நிலைபெற்ற உயிர்களெல்லாம் தொழும் என்றவாறு இக்குறளின் விளக்கமாக உயிர் என்றது சலிப்பற்ற அறிவு எனக் குறிப்பிடுகிறார். தான் என்றது தான் இப்போது நிற்கின்ற உடம்போடு கூடிய நிலைமையாகும். தான் அறுதலாவது மனமற்ற நிலையாகும். உயிரை சலிப்பற்ற அறிவு எனக்குறிப்பதால் அது இடைவிடாத பக்குவ நிலையினாலே தியான சமாதியாகிய உயர்ந்த நிலையை அடையும் என்பதாகும்.

*"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு"*

என்னும் குறளுள்ளும் "பற்றினை" என்னும் சொல்லுக்குத் "தியான சமாதி" என்றும் தியான சமாதியைப் பற்றினார் பிற விருப்புகளுக்குப் பயன்படுத்தாது இடைவிடாது தியான சமாதியில் நிலைத்திருக்கப் பயில்க என்பார்.

**முடிவுரை**

திருவள்ளுவர் உலகம் தழுவிய மெய்யுணர்வாளர்; அவர்க்கு அறம், பொருள், இன்பம் என்பது இவ்வுலக வாழ்வில் மனிதனுக்குரிய பேறுகளாகும். அப்பேற்றினை துய்த்தற்குரிய வழிமுறைகளையும் அவன் பெறுகின்ற பேற்றுள் தலையாயது அறநெறி நிற்றலேயாகும்; அறநெறி நிற்பவர்க்கு பொருளும் இன்பமும் தக்காங்கு அமையும். அதனினும் மேலான தியானநிலை கூடினும் கூடும் கூடாது போயினும் அது அவனுக்குரிய கவலையில்லை. நெறிநிற்றலே அவனுடைய கடப்பாடாகும். திருக்குறள் அறத்தின் வெளிப்பாடு என்பார் புறநானூற்று ஆசிரியர். அதனை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

*"பொருளும் இன்பமும் அறத்துவழிப்படும்*
*தோற்றம் போல"* - புறம்

# மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா

தமிழாகரர் **தெ.முருகசாமி**
முன்னாள் முதல்வர்,
இராமசாமி தமிழ்க்கல்லூரி, காரைக்குடி.

"மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்ற தொடர், நன்னூலில் பொதுவியலில் உயர்திணையும் அஃறிணையும் தொடர்ந்து விடா என்ற அஃறிணையுடன் முடியலாமா? என்ற கருத்தை விளக்கும் மேற்கோள் தொடராகக் காட்டப்பட்ட ஒன்றாகும். இத்தொடரின் இலக்கணப் பாங்குடன் இதன் பொருள் உணர்தலைக் குறித்தது இக்கட்டுரை.

ஒரு தொடரில் சொற்கள் தொடருங்கால் உள்ள இலக்கணப் பாங்கில் எழுவாயும் பயனிலையும் இன்றியமையாதனவாகும். இவ்விரண்டிற்கும் இடையே தொடரும் சொற்கள் தொடர்ப்பொருளைத் தெளிவுபடுத்த உதவுவனவாய்ப் பயிலப்பட்டு வரும்.

அந்த வகையில் மூர்க்கனும் முதலையும் என்ற எழுவாய்க்கு விடா என்ற ஆகார எதிர்மறைச் சொல் பயனிலையாய் நிற்கிறது. இடையில் உள்ள கொண்டது என்ற சொல் "து" விகுதி பெற்ற தொழிற்பெயர்ச் சொல்லாகும்.

இத் "து" விகுதி பெற்ற கொண்டது என்ற சொல், கொண்டதை விடா என்ற செயப்படுபொருளில் கொள்ளுதலைவிடா எனும் தொழிற்பெயர்ப் பாங்குடன் தொடரின் கருத்தை நிறைவு செய்ய உதவுகின்றது.

இங்ஙனம் கொள்ளுதல் என்ற தொழிற்பெயர் நிலையில் நிற்கும் கொண்டது என்ற ஒருமைச் சொல், விடா என்ற பன்மையுடன் சேர்தல் சரியா? என்றும், மூர்க்கனும் முதலையும் என்ற எழுவாய்ப்பன்மை - கொண்டது என்ற ஒருமைச் சொல்லை முடிக்கும் சொல்லாகக் கொள்வது சரியா? என்றும், உயர் திணை அஃறிணையாகிய மூர்க்கனும் முதலையும் கலந்து நின்று, விடா என்ற அஃறிணைப் பயனிலையைக் கொள்வதும் சரியா? என்றும் ஈண்டு சில ஐயங்கள் உள்ளன. அவற்றைச் சில இலக்கணப் பாங்குடன் களைந்து உண்மை அறிய வேண்டும்.

மூர்க்கனும் முதலையும் உயர்திணை அஃறிணையான வேறுபாடாயினும் பிடிவாத குணமாகிய இழிந்த தன்மையாம் மாறுபாடில்லாத ஒரே குணத்தராய் அவ்விருவரும் கருதப்படுதல் காரணமாக ஈருடல் ஓருயிர் போல ஈண்டு மூர்க்கனும் முதலையும் ஒரு குணம் உடைய நிலையில் கொண்டது என்ற ஒருமைச் சொல்லைக் கொண்டுமுடிந்து, பின்னர் விடாது என்ற ஒருமைப் பொருள் நிலையில் விடா என்ற பயனிலையை அடைந்தன.

இங்ஙனம் மூர்க்கனும் முதலையுமான பன்மை இழிந்த பிடிவாத குண

ஒற்றுமையால் ஒருமையாய்க் கருதப்பட்ட நிலையில் கொண்டது என்ற ஒருமையைத் தொடர்தல் என்பது திருவள்ளுவரின் ஒரு குறள் வழிகாட்டுதலால் ஒரோ வழி உண்மையென உணரலாம்.

*"இருநோக் கிவளுண்கண் ணுள்ள தொருநோக்கு*

*நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"* *(1081)*

என்ற குறளில் இருநோக்கு உள்ளன எனப் பன்மையில் கூறாமல் உள்ளது என்ற கருத்தைத்தான் மேற்படி மூர்க்கனும் முதலையும் கொண்டன எனப் பன்மையில் கூறாமல் கொண்டது என ஒருமையில் சென்று முடிந்ததைப் பொருத்திக் காணுமாறுள்ளது.

தலைவியின் இரண்டு கண்களும் இருவேறு நோக்காக நோக்காமல் ஒரே நோக்காக நோக்குதலால் உள்ளது என்ற ஒருமை முடிபைக் கொண்டது. கண் இரண்டாயினும் நோக்கு ஒன்றே யாதலால் உள்ளது என்ற ஒருமைக்குரியதாயிற்று. கண்ணிரண்டும் ஒன்றையே காண் என்பது சிவப்பிரகாச சுவாமிகளின் நன்னெறி வாக்குப் போன்றதே இருநோக்கு உள்ளது என்பதாம்.

கண்ணிரண்டும் நோக்குங்கால் ஒரே தன்மையில் நோக்கும். அவைகள் அடுத்தடுத்து மாறிமாறி நோக்கும் காதல் உணர்வை வெளிப்படுத்தும் வேறுபாட்டை உணர்த்தவே திருவள்ளுவர் ஒன்று என்றும் ஒருநோக்கு என்றும் காதல் நோய் செய்வதையும் அந்நோய்க்கான மருந்துமாகத் தனித்தனி கூறினார். அங்ஙனம் மாறிமாறி நோக்கினும் நோக்கு ஒன்றே என்பதும் நோக்கிய நோக்கம் வேறு வேறானது என்பதும் பெறப்படும். ஆக எந்நிலையில் இரு கண்களால் நோக்கினாலும் நோக்கு ஒன்றேயாதலால் உள்ளது என்ற ஒருமைக்கான முடிபைக் கொண்டதாம் என்க!

இக்கருத்தை வேறொரு குறிப்பாலும் உணரலாம். ஐந்தலை நாகம் உடன்றது (வருத்தியது) என்றால் நாகம் வருத்தியதேயன்றி ஐந்தலை வருத்தியதன்று என்பதுபோலக் கண்ணிரண்டாய் நோக்கு ஒன்றானதால் உள்ளது என்ற ஒருமையுடன் நின்றதாம். இஃதேபோல் மூர்க்கனும் முதலையும் பிடிவாதகுணம் என்ற ஒருமைப் பண்பால் ஒருமைப் பொருளில் கொண்டது என்றதுடன் பொருந்திற்று.

அங்ஙனமாயின் கொண்டன விடா எனப் பன்மையாய் ஆகாதோ எனின், ஆகா! ஏனெனில் தொழிற் பெயராம் கொண்டதுபோலக் கொண்டன என்பது தொழிற்பெயராகா! என்பதால் கொண்டது என்ற ஒருமையே பொருத்தமாம் என்க.

மேலும் தொழிற்பெயராம் கொண்டது என்ற ஒருமையை மூர்க்கனும் கொண்டதை விடா, முதலையும் கொண்டது விடா எனத் தனித்தனியே கூட்டி மொழிந்து பொருளை உணர்தல் போல, கொண்டன என்ற சொல்லைத் தனித்தனியே தொழிற்பெயர் நிலையில் கூட்டி மொழிய வாய்ப்பில்லை என்பதால் கொண்டது எனக் கூறப்பட்டதே பொருத்தம் எனலாம்!

மேலும் மூர்க்கனும் முதலையும் என்ற தொடரில் கொண்டது எனக் கூறப்பட்டதற்கே இலக்கண அமைதி காண்டல் பொருந்துமேயன்றிக் கூறாததற்கு விவரித்தல் - வேண்டா விதப்பாகிவிடும் என்பதால் கொண்டது எனக் கூறப்பட்டதற்கே பொருத்தம் காணப்பட்டது எனலாம்.

அடுத்து கொண்டது என்ற ஒருமை விடா என்ற பன்மையுடன் எங்ஙனம் பொருந்தும் எனக் காண வேண்டும். விடா என்பது ஆகார எதிர்மறைப் பன்மைப் பொருளை உணர்த்தினும் விடாது என்றது அஃறிணை ஒன்றன்பாலுக்குரிய ஒருமைச் சொற்பொருளையே தந்து நிற்கிறது எனலாம். அஃது எவ்வாறெனில், "அறத்தா றிதுவென வேண்டா" என்ற குறளின் (37) சிறப்புரையில் வை.மு.கோ. அவர்கள் வேண்டும் என்ற உடன்பாட்டிற்கு வேண்டா என்பது எதிர்மறை எனக் கூறியதால் வேண்டாம் என ஒருமை நிலையில் கூறப்பட்டதாக உணர வேண்டும். எனவே இது என்ற ஒருமைக்கு வேண்டா - ஒருமையாம் எனலாம்.

பொதுவாக எதிர்மறைச் சொல்லில் ஒருமை பன்மை ஆராய்ச்சியின்மையால், கூறப்படும் தொடர்நிலைக்கேற்ப ஒருமை அல்லது பன்மையாகக் கருதலாம். அவ்வாறாகவே ஈண்டு கொண்டது என்ற ஒருமைக்கேற்ப விடா என்பதை விடாது என ஒருமையாகக் கூறல் தகும் எனலாம்.

அதாவது கொண்டன என அமைந்திருந்தால் விடா என்பதைப் பன்மையாகக் கருதுதலே பொருத்தமாம் எனலாம். ஆக விடா என்ற சொல், உயர்திணை அஃறிணைகளின் ஒருமைப்பட்ட பிடிவாத குணமான எழுவாய் ஒருமைக்கேற்பவே விடாது என்ற அஃறிணை ஒருமை முடிபாய் நின்றது என்க!

அடுத்து உயர்திணை அஃறிணை கலந்த சொற்கள் உயர்திணை முடிபைக் கொள்ளுமா? அஃறிணை முடிபைக் கொள்ளுமா என்ற ஐயத்தை நன்னூலின் கீழ்க்கண்ட பொதுவியல் நூற்பா (28) தெளிவுபடுத்துகிறது.

*திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்*

*மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே*

என்ற நூற்பாவின்படி, திணை விரவிய சொற்கள் இழிபு காரணமாக அஃறிணை முடிபைக் கொள்ளும் என்பதால் மூர்க்கனும் முதலையுமாகிய திணைகள் நூற்பா கூறும் இழிபினும் என்றபடி விடா எனும் அஃறிணை முடிபு கொண்டன.

இதனால் மூர்க்கன் உயர் திணையாயினும் மாவும் மாக்களும் ஐயறிவினவே என்ற தொல்காப்பியர் கருத்தின்படி ஐயறிவான அஃறிணைக்குரியவனானதால் முதலை என்ற விலங்கோடொப்ப இரு அஃறிணைகளும் விடா என்ற அஃறிணை முடிபேற்றனவாம்.

# "வழிகாட்டும் வள்ளுவம்"

பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி,** பி.இ., எம்.ஏ., (சமூகவியல்)

## நூல் அறிமுகம்

'தமிழ்த் தேனீ' என்று பரவலாக அறியப்பட்டுள்ள **பேராசிரியர் இரா.மோகனும்** அவருடைய துணைவியார் பேராசிரியர் நிர்மலா மோகனும் சேர்ந்து எழுதியுள்ள "வழிகாட்டும் வள்ளுவம்" நூல், ஒவ்வொரு மாந்தனும் எப்படி வாழ்வாங்கு வாழவேண்டும் என்று வழிகாட்டுகின்ற நூலாக எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் ஒப்பியல், மரபியல், நோக்கியல் ஆகிய மூன்று முனைகளில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

முதல் கட்டுரை, திருவள்ளுவர் ஓர் **உடன்பாட்டுச் சிந்தனையாளர்** என்பதை உரத்து ஒலிக்கின்ற முறையில் தொடங்குகிறது. ஜெர்மன் நாட்டுப் பேரறிஞரும், இசை, மருத்துவம் - தத்துவம் ஆகிய துறைகளில் புலமை பெற்றவருமான **ஆல்பர்ட் சுவைட்சர்,** 'இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' என்ற தமது நூலில் திருவள்ளுவர் ஓர் உடன்பாட்டுச் சிந்தனையாளர் என்று அழுத்தமாகக் கூறி, உலக இலக்கியங்களில் இந்தளவு உயர்ந்த மெய்யுணர்வு ததும்பும் அறவுரைக் கோவை வேறு எந்த நூலிலும் இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் என்பதை நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வையத்தில் ஒருவன் வாழ வேண்டிய வழிமுறைகளில் வாழ்ந்தால் வானுலகில் உள்ள தேவர்களில் ஒருவனாக அவன் மதிக்கப்படுவான் (குறள்.50) என்று வள்ளுவர் கூறுவது முழுமையான ஓர் உடன்பாட்டுச் சிந்தனையாகும் என்று நூலாசிரியர்கள் கூறுவது நன்று. வானில் உறையும் தெய்வத்துடன் சேர்வதற்கு ஒருவன் துறவியாக வேண்டுவதில்லை; எந்தவொரு மடத்திலும் சேர வேண்டுவதில்லை. மற்றவர்களையும் அறநெறியில் வாழச்செய்து, தானும் அறம் வழுவாத இல்வாழ்க்கை வாழ்ந்தால் அவன் தவம் செய்வாரை விட மேம்பட்டு விளங்குவான் (48) என்ற வள்ளுவத்தின் உடன்பாட்டு நிலை, மனித வாழ்வியலில் ஒரு மாபெரும் புரட்சியாகும்.

மரணத்தையும் ஓர் உடன்பாட்டு நிகழ்வாக வள்ளுவர் காண்பிக்கிறார். நேற்று இருந்த ஒருவன் இன்று இல்லாமல் போனான் என்கின்ற பெருமையை உடையது இவ்வுலகம் (356) என்று சொல்லி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார்.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு *(339)*

பிறவிச் சுழற்சியை இயல்பான வாழ்வியலாக ஏற்றுக்கொண்டால் பிறப்பும் இறப்பும் இயல்பான வாழ்வியல் நிகழ்வுகள்தாமே? இந்தப் புரிதல் கைவரப் பெற்றால், வாழ்வில் எந்த நிலையிலும் நாம் துயர்உற மாட்டோம் என்பதை இந்த முதல் கட்டுரை உணர்த்துகிறது.

ரோமானியப் பேரரசை ஆண்ட மார்க்கஸ் அரேலியஸ், சீன நாட்டுச் சிந்தனையாளர், கன்ஃபூசியஸ், வட இந்தியாவில் பிறந்து வாழ்ந்த வாய்மொழிக் கவிஞர் கபீர், இந்தியாவில் வடமொழியில் தர்மசாஸ்திரத்தை எழுதிய மனு, கர்நாடகத்தில் கன்னட அற இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்பட்ட சர்வக்ஞர் ஆகியோரைத் திருவள்ளுவருடன் ஒப்பிட்டு எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் வள்ளுவத்தின் உலகளாவிய ஆளுமையைப் புலப்படுத்துகின்றன.

*அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு*

*ஐந்துசால்பு ஊன்றிய தூண் (983)*

என்ற குறளுக்கு விளக்கம் அளிப்பது போல் கன்ஃபூசியஸ் தம் சீடர்களுக்கு வழங்கிய அறிவுரை அமைந்துள்ளது. "அமைதியுடைய நடத்தை, தாராள மனப்பான்மை, நேர்மை, முனைப்பார்வம், அன்புடைமை ஆகிய ஐந்தும் அறத்தின் நிலைக் கலன்கள் ஆகும். நீ அமைதியாக நடந்துகொண்டால் யாரும் உன்னை அவமதிக்கமாட்டார்கள். நீ தாராள மனப்பான்மை உடையவனாய் இருந்தால் எளிதில் நீ பிறருடைய அன்பைப் பெற்றுவிடலாம். நீ நேர்மையாக நடந்து கொண்டால் மக்கள் உன்னிடத்திலே நம்பிக்கை வைப்பார்கள். நீ முனைப்பார்வம் உடையவனாக இருந்தால் எதிலும் நீ மிகுதியாகத் தேர்ச்சி பெற்று விளங்கலாம். நீ அன்புடையவனாக இருந்தால் பிறருடைய உதவியை எளிதில் பெறுவாய்" (லூன் யூ 17:6).

*இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை*

*வேண்டும் பிறர்கண் செயல் (316)*

என்று வள்ளுவர் கூறுவதைப் போன்றே கன்ஃபூசியஸ், "எதைப் பிறர் நமக்குச் செய்யக்கூடாது என்று நினைக்கிறோமோ அதை நாம் பிறர்க்குச் செய்யாமல் இருப்பதே எல்லா நிலைகளிலும் நாம் பின்பற்றத் தக்க சிறந்த அறமாகும்" (முதுமொழிகள் 15:23) என்று வலியுறுத்தியுள்ளார்.

கன்ஃபூசியசின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஓர் உன்னத நிகழ்ச்சியை இந்த நூல் விவரிக்கிறது. ஒரு பொழுது அவர் ஒரு குளத்தில் குளித்துக் கொண்டிருந்தாராம். ஒரு தேள் குளத்தில் எப்படியோ விழுந்து விடுகிறது. அதைக் காப்பாற்ற கன்ஃபூசியஸ் தேளைக் கையில் எடுக்கிறார். தேள் நீரில் விழுகிறது. மறுபடியும் தேளை எடுக்கிறார். தேள் கொட்டுகிறது. கை உதறல், நீரில் தேள். இந்த நிகழ்வு அப்படியே தொடர்கிறது. இதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவன், "தேள்தான் கொட்டுகிறதே, நீங்கள் ஏன் விடாமல் அதைக் கையில் எடுக்கிறீர்கள்?" என்று கேட்கிறார். கன்ஃபூசியஸ் சொல்கிறார் - "தேளின் இயல்பு கொட்டுவது. நான் மனிதன். எனது கடமை அதைக் காப்பாற்றுவது". கன்ஃபூசியஸ் ஒரு சான்றோர். சால்பு உடையவர். சால்பின் தன்மை யாது?

***இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்***

***என்ன பயத்ததோ சால்பு? (987)***

*என்பது குறள். இவ்வாறு கன்ஃபூசியசின் வாழ்வியலும் வாக்குகளும்* வள்ளுவத்துடன் இயைந்திருப்பதை நூலாசிரியர்கள் விவரித்து எழுதியிருப்பது சிறப்பாகவும் சுவையாகவும் உள்ளது.

**'திருக்குறள் காமத்துப்பாலும் நாட்டுப்புறக் காதல் பாடல்களும்'** என்ற கட்டுரை சுவையான சிந்தனைக் களமாக அமைந்துள்ளது. அறநெறி கூறும் வேறு எந்தப் பனுவலிலும் காமம் இடம் பெற்றதில்லை. ஆகவே முப்பாலின் ஒரு பாலாகக் காமத்துப்பாலைச் சேர்த்ததன் மூலம் வள்ளுவர் ஒரு வாழ்வியல் புரட்சியைச் செய்திருப்பதை யார்தான் மறுக்க முடியும்?

காமம் இல்லாவிட்டால் வாழ்வு எவ்வாறு முழுமையை எய்தும்? ஆகவேதான் முப்பால் நூலை நிறைவான ஒரு வாழ்வியல் நூல் என்று உலக அறிஞர்கள் போற்றுகிறார்கள். அறத்துப்பால், பொருட்பாலைப் போல் காமத்துப் பாலில் திருவள்ளுவர் நேரடியாக எதையும் கூறுவதாக ஒரு குறளும் இல்லை. நாடக மேடையில் ஒரு காதலியின் குரலாகப் பெரும்பான்மையான குறள்களும், *காதலனின் குரலாகச் சில குறள்களும் காமத்துப் பாலில் இடம்பெற்றுள்ளன.* அறிஞர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் காமத்துப்பால் பற்றிக் கூறும்போது, "காமத்துப்பாலில் வரும் ஒவ்வொரு குறளும் காதலின் உயர்நிலையை விளக்கத்தக்க. உலக நிகழ்ச்சி ஒன்றில் முகிழ்த்தெழுந்து, உள்ளடங்காத இன்ப உணர்ச்சிப் பேச்சாக நின்று, ஒழுக்க மணம் வீசி, அன்புத் தேன் பிலிற்றி, மலர்ந்து வரும் தமிழ்ப்பூ ஆகும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு காப்பியம்; ஒரு பேச்சில் திரண்டு விளங்கும் நாடகம்; இந்நாளைய வழக்கில் விளக்கினால், ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடகத்தின் பேச்சாக அமையும் சிறு கதை எனலாம்" (வள்ளுவர் கண்ட நாடும் காமமும் - ப.197) என்று விவரித்திருப்பது தனிச் சிறப்பான பதிவாகும்.

தமிழ்நாட்டின் நாட்டுப் புறங்களில் பெரும்பான்மையான மக்கள் உழவுத் தொழில் செய்கிறார்கள். இத் தொழிலில், களை எடுத்தல், பருத்தி எடுத்தல் போன்ற பணிகளைப் பெண்கள் செய்வர். உழுதல், மண்ணை வெட்டி அருகம்புல் அகற்றுதல் போன்ற வேலைகளை ஆடவர்கள் மேற்கொள்வர். தனித்தனியாக வெய்யிலில் இவர்கள் தம் வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது அயர்ச்சி ஏற்படாமல் இருப்பதற்காக, பாடல்களைப் பாடிக்கொள்வார்கள். ஒருவரையொருவர் விரும்புகின்ற ஆணும் பெண்ணும் பாடல்கள் மூலமே பேசிக்கொள்வர். எடுத்துக்காட்டாக இந்த நூலில் பதியப்பட்டுள்ள பாடல் வரிகள்;

பெண்: ஆலமரம் உறங்க
அடிமரத்துக் கொப்புறங்க
பாதையிலே நானிருக்க - நீங்க
பக்க வழி போகலாமா?

ஆண்: வாழையடி உன் கூந்தல்
வைரமடி பல்காவி
ஏழையடி நானுனக்கு
இரங்கலையோ உன் மனசு?

பெண்: சந்திரரே சூரியரே
தலைக்கு மேலே வாரவரே
இந்திரர்க்கு இளையவரே - நான்
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்?

ஆண்: அத்தை மகளே - நீ
அருவங்கொடி வாயழகி
கோவம் பழத்தழகி - என்னைக்
கொழுந்த னின்னு கூப்பிடடி
மேற்கே சூலமடி
மே மலையும் கோணலடி
நாளைப் பயணமடி

பெண்: நானும் வாரேன் ஓடிப்போவோம்

இத்தகு நாட்டுப் பாடல்களின் வளர்ச்சியே இலக்கியத்திற்கு இட்டுச் சென்றது என்கிறார் தமிழண்ணல். "வாழ்க்கை என்னும் தாய் பெற்றெடுத்த செல்வம் இலக்கியம். வாழ்க்கையிலே உள்ள மரபுகளையே இலக்கியக் குழந்தையிடமும் நாம் காணுகிறோம். அவ்விலக்கியத்தின் இளங்குழவிப் பருவமே நாட்டுப் பாடல்கள்; முதிர்ச்சிப் பருவமே இலக்கியங்கள். இன்னும் சொன்னால் நாட்டுப்பாடல்கள் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் பொது; இலக்கியம் கற்றவர்க்கே உரியது. முன்னது இன்னும் சரியாக ஏட்டிலே ஏறாதது; பின்னது ஏட்டிலேதான் பிறப்பது. முன்னது மண்ணிலிருந்து எடுத்த கலப்புப் பொருள்; பின்னது பிரித்தெடுத்த உலோகப் பொருள். முன்னது தீட்டாத வைரம்; பின்னது பட்டடை தீட்டிய வைரம். சுருங்கக் கூறினால், நாட்டுப்பாடலின் வளர்ச்சியே இலக்கியம் எனலாம்" (காதல் வாழ்வு, பக்.44,45) என்ற பேராசிரியர் தமிழண்ணலின் சொற்களை இலக்கிய இணையர்கள் தம் நூலில் இனிதே பதிவு செய்திருக்கிறார்கள்.

திருக்குறளுக்கு நூற்றுக்கணக்கானோர் உரை எழுதியிருக்கிறார்கள். அவற்றுள் வ.உ.சிதம்பரனார், திரு.வி.க., நாமக்கல் கவிஞர், பாவேந்தர், தமிழ் ஞாயிறு, ஞா.தேவநேயப்பாவாணர், அறிஞர் வ.சுப.மாணிக்கம், அறிஞர் தமிழண்ணல், சிற்பி ஆகியோர்தம் திருக்குறள் உரைகளை நூலாசிரியர்கள் ஆய்வு செய்துள்ளனர்.

நாமக்கல் கவிஞர் உரை காந்தி மணம் கமழும் என்கின்றனர். "... நான் அறிந்து கொண்ட உண்மை என்னவென்றால் திருக்குறளிலுள்ள ஞானம்தான் காந்தியாக வடிவெடுத்து வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டியது" என்கிறார் நாமக்கல் கவிஞர்.

***யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்***
***வாய்மையின் நல்ல பிற*** *(300)*

என்ற குறளுக்கு 'நாம் ஆராய்ந்தறிந்த உண்மைகளுக்குள் பொய் சொல்லாமையாகிய வாய்மையைக் காட்டிலும் நல்ல துணை வேறொன்றும் இல்லை' என்பது இக்குறளின் பொருள். "மெய்யாக் கண்டவை" என்பது கற்றும் கேட்டும் அனுபவித்தும் அறிந்த உண்மைகள். சத்தியத்தைக் கடைப்பிடிப்பதைக் காட்டிலும் உயர்ந்த அறிவே இல்லை என்பது கருத்து" எனக் காந்திய நெறி நின்று இக்குறளுக்கு விளக்கவுரை வரைவார் நாமக்கல் கவிஞர் என்றும், காந்தியடிகள் தம் சுயசரிதைக்குச் 'சத்திய சோதனை' என்று பெயரிட்டிருப்பது இங்கு நினைவுகூரத் தக்கது என்றும் நூலாசிரியர்கள் சுட்டிக் காண்பித்திருப்பது கருத்தில்கொள்ளத்தக்கது.

அறிஞர் வ.சுப.மாணிக்கம் 'திருக்குறள் தெளிவுரை'யில் சில குறள்களுக்கு வினா விடை நடையில் உரை எழுதியிருப்பது படிப்பவர் மனத்தில் குறட் கருத்தினை எளிதில் புரிந்துகொள்ள ஏதுவாக அமைந்துள்ளது.

*கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்*
*கற்ற செலச்சொல்லு வார்.* (குறள். 722)

உரை: கற்றாருள் கற்றார் எனப்படுவார் யார்?
கற்றார்முன் எடுத்துச் சொல்ல வல்லரே.

எளிமை, சுருக்கம், தெளிவு ஆகிய இவையே வ.சுப.மா.வின் திருக்குறள் தெளிவுரையை அணி செய்யும் முப்பெரும் பண்புகள் என்கின்றனர் நூலாசிரியர்கள்.

*உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதில்லார்*
*மரம்மக்கள் ஆதலே வேறு.* (குறள்.600)

உரை: ஊக்க மிகுதியே வலிமை. அது இல்லாதவர்
நிலையால் மரம்; வாழ்வால் மானிடர்

'செம்மல் மாணிக்கனாரின் திருக்குறள் தெளிவுரை, வள்ளுவர் உள்ளம் அறிய வழிவகுப்பதோடு செம்மை சேர் வாழ்க்கைக்கும் துணை நிற்கும்' என்னும் பேராசிரியர் இரா.சாரங்கபாணியின் மதிப்பீடு நூற்றுக்கு நூறு உண்மையே என்பதைப் பதிவு செய்கின்றனர் இந்நூலாசிரியர்கள்.

அறிஞர் தமிழண்ணல் தமது 'திருக்குறள் நுண்பொருள் உரை'க்கு எழுதிய முன்னுரையில், "படிப்பவர் எவர்க்கும் விளங்கிவிடவேண்டும். வள்ளுவர் உள்ளம் - உட்கிடை - உள்ளொளி யாதெனத் தெள்ளத் தெளிவுற வேண்டும்" என்று வரையறுக்கிறார். ஆக, தன் நுண்பொருளுரையில் ஆழமான நுண்பொருளை மிக அழுத்தமாக அவர் புலப்படுத்துகிறார்.

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்.* (குறள்.50)

இக்குறளுக்கு உரை எழுதும் தமிழண்ணல், பிற சமயவாதிகள் துறவறம் தவங்களுக்குத் தரும் சிறப்பையெல்லாம் வள்ளுவர் இல்லறத்துக்குத் தரும்

நுட்பம் காண்க என்றும், வாழ்வாங்கு வாழ்பவனைத் தெய்வம் என்றே கூறுவது அவர் கருத்தில் மணிமுடியாகவே திகழ்கிறது என்றும் நூலாசிரியர்கள் வியக்கின்றனர்.

காமத்துப்பால் ஒரு பாலியற் பள்ளிக்கூடம் ஆகும். காதலர்கள் கூடுவதே இன்பம் என, அதிலேயே மூழ்கி உடல் நலனை இழக்காமல், அன்பாய்ப் பழகுதலே காதலின்பம் எனக்கருதி, ஊடி, சிரித்து மகிழ்ந்து, உரையாடி வாழுமாறு இவ்வியலில் (புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை) உள்ள குறட்பாக்களின் வாயிலாகப் பாடம் சொல்லியுள்ளார் வள்ளுவர் என்கிறார் தமிழண்ணல்.

*தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*

*கற்றனைத்து ஊறும் அறிவு.* *(குறள்.396)*

இக்குறளுக்குப் பேராசிரியர் தமிழண்ணல், "கல்வி உளவியலார் உள்ளத்தின் உள்ளிருக்கும் அறிவை மென்மேலும் மலரச் செய்வதே கல்வி என்று இன்று கூறுவதை இதனுடன் ஒப்பு நோக்குக. அதாவது, அறிவு என்பது வெளியிலிருந்து பெறப்படுவதன்று. ஒவ்வொருவரிடமும் அறிவு உள்ளுள் உளது. அதை மலரச் செய்வதே கல்வி என்பர் உளவியலார்" என்று விளக்கம் தருகிறார்.

சுருங்கக் கூறின், தமிழண்ணலின் நுண்பொருளுரை திருக்குறளின் உள்ளொளியைத் தேடும் முயற்சியை நோக்கி நம்மை ஆற்றுப்படுத்துகிறது என்று நூலாசிரியர்கள், பேராசிரியர் தமிழண்ணலுக்குப் பெருமை சேர்க்கிறார்கள்.

**'திருக்குறள்: அகநிலை ஆய்வு நோக்கு'** என்ற கட்டுரையில் திருக்குறளின் தனிச் சிறப்புகள் விவரிக்கப்படுகின்றன. காமத்துப்பாலில், புலவி நுணுக்கம் அதிகாரத்தில் வரும் ஊடல், உயர்ந்த மாசற்ற ஊடலாகக் காட்சிப்படுத்தப்படுகிறது. தொல்காப்பிய, சங்க இலக்கியங்களில் தலைவியின் ஊடலுக்குத் தலைவனின் பரத்தமையே ஒரு பெருங்காரணமாகக் குறிப்பிடப் பட்டுள்ளதற்கு மாறாகத் திருக்குறள் காமத்துப்பாலில் வரும் ஊடலுக்குப் பரத்தமை காரணப்படுத்தப்படவே இல்லை.

*இல்லைதவறு அவர்க்கு ஆயினும் ஊடுதல்*

*வல்லது அவர் அளிக்குமாறு* *(குறள்.1321)*

என்ற குறள் திருவள்ளுவர் ஒரு வாழ்வியல் புரட்சியாளர் என்பதை நிறுவுகின்ற இன்னொரு பதிவாகும்.

"இந்தக் காம இன்பத்தினைக் கடவுள் இன்பத்தோடு ஒப்புக் கூறுதலும் காண்கிறோம். 'தாமரைக் கண்ணான் உலகு' (1103) 'அமிழ்து' (1106) என்பவற்றைக் காண்க. 'சர்வகந்த', 'சர்வரச' என்று ஆண்டவனைக் கூறுவது போல, 'வேட்டபொழுதின் அவை அவை போலுமே' (1105) என்று கூறுவதும் காண்க. 'பாலொடு தேன் கலந்தற்றே' (1121), 'உடம்பொடு உயிரிடை நட்பு' (122) என அத்துவித நிலைக்குப் பல உவமைகள் வருகின்றன. ...இல்லத்தினைத்

தமிழர் வீடு என்றே கூறத் துணியவில்லையா? இவ்வாறு காதலைத் தூய்மை செய்து கடவுட் காதலாக மாற்றிவிடுகிறார் வள்ளுவர். "காமத்துப்பால் நேரே சிற்றின்பத்தையும் உள்ளுறை வகையால் பேரின்பத்தையும் கூறுவதுபோல் தோன்றுகிறது" என வள்ளுவர் கண்ட காதலின் தூய்மையையும் உயர்வையும் போற்றி உணர்த்துகிறார் பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் (வள்ளுவர் கண்ட நாடும் காமமும், பக்.199,200) என்பதை எடுத்துக் காண்பிக்கின்றனர் நூலாசிரிய இணையர்கள்.

'வள்ளுவம் வலியுறுத்தும் இறைநிலை' என்பது இந்த நூலில் உள்ள இன்னொரு கட்டுரை. 'ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ" என்னும் மாணிக்கவாசகரின் மணிவார்த்தையும், 'வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கில், விளங்கு பரம்பொருளே நின் விளையாட்டல்லால் மாறுபடும் கருத்தில்லை' என்னும் தாயுமானவரின் சமரச மொழியும், 'ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு' என்னும் பட்டினத்தாரின் பொன்மொழியும், 'ஒன்று பரம்பொருள், நாமதன் மக்கள், உலகு இன்பக் கேணி' என்னும் பாரதியாரின் வைரவரியும் சார்பின்மையையும் சமரசத்தையும் உயிராகக் கொண்ட வள்ளுவத்தை அடியொற்றி மலர்ந்தவை என்று தெரிவித்துக் கட்டுரையை நிறைவு செய்திருப்பது திருக்குறள் ஆர்வலர்களின் மனத்தை நிறைவு செய்வதாக உள்ளது.

நூலின் இறுதிக் கட்டுரை 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்பது. இப்பிறப்பில் நுகர்வதற்கு என ஒருவனுக்கு அமைந்துவிட்ட வினைப்பயன் எவ்வாறேனும் அவனை நுகரவே செய்யும். 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்னும் சிலப்பதிகார விதிமுறை இங்கு ஒப்புநோக்கத்தக்கது என்று நூலாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

*ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*

*தாழாது உஞற்று பவர்* *(குறள்.620)*

என்ற குறள்,

*ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று*

*சூழினும் தான்முந் துறும்* *(குறள்.380)*

என்ற குறளுக்கு முரண்படுவதுபோல் தோன்றுகிறதே? இதற்கு விடையிறுப்பதாகவுள்ள பேராசிரியர் சோ.ந.கந்தசாமி பிறிதொரு கோணத்தில் ஊழ் பற்றிய திருவள்ளுவரின் கருத்தினைத் தெளிவுறுத்துகிறார் என்று நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அக்கருத்து வருமாறு:

"வள்ளுவர் ஆகூழ், போகூழ் என்று ஊழினை இருவகையாகப் பிரித்துரைப்பார். 'ஆகூழால் ஆகும் அசைவின்மை' என்பதால் உலைவின்றித் தாழாது உஞற்றுதற்கும் ஆகூழின் அமைப்பு இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் ஊழினை வெல்லுதல் இயலும் என்பது தெளிவு. சிவப்பிரகாசர் "மனத்தை அடக்க மனம் துணையாகும்" என்றாற்போல, 'ஊழினை வெல்ல ஊழ்

துணையாகும்' என்று கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு கொண்டால் 'ஊழிற் பெருவலி யாவுள' என்னும் கருத்து முரண்படவில்லை என்பது தெளிவு" (திருக்குறள் கூறும் உறுதிப் பொருள், பக்.221,222).

இந்த விளக்கம் நமக்குத் தெளிவுபடுத்துவதாக இல்லை. "ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான்முந்து உறும்" என்று அழுத்தமாகச் சொன்ன வள்ளுவர் ஊழை வெல்லலாம் அல்லது புறங்காணலாம் என்று தமக்குத் தாமே முரண்படுவாரா? ஊழையும் உப்பக்கம் காண்பர் என்பதற்கு ஊழை நேருக்கு நேராக எதிர்கொள்ளாமல் (Encounter), அதனைப் பக்கவாட்டில் (Sideway) கடந்து செல்வர் (Bypass) என்று பொருள் கொள்ளலாம் அல்லவா? திருக்குறள் ஆய்வாளர்கள் இதனைக் கருதிப் பார்க்கலாம்.

**வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பது இந்நூலாசிரியர்களின் நோக்கம்** என்றறிகிறோம். கன்னட அற இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படும் சர்வக்ஞர் தம்முடைய ஒவ்வொரு பாடலையும் சர்வக்ஞ என்று தம் பெயரைச் சேர்த்தே முடிக்கிறார். திருவள்ளுவரோ தம் பெயர், தாம் பிறந்து வளர்ந்த ஊர், செய்திட்ட தொழில் போன்ற தன்வரலாற்றுக் குறிப்புகள் எதையும் விட்டுச் செல்லவில்லை. உலகப் பொதுமறையாம் திருக்குறளில் தமிழ், தமிழகம் என்று கூட எதனையும் குறிப்பிடவில்லை. இங்கு திருவள்ளுவரும் சர்வக்ஞரும் ஒன்றுபடும் இடங்கள் என்று நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ள பாடல்களைப் பார்ப்போம்.

*மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்*
*ஆகுல நீர பிற. (குறள்.34)*
*"காசிப் பயணத்தின் காரணம் என்னய்யா?*
*மாசிலான் மனத்துள் இருக்க - அலைவது*
*காசினியில் ஏனோ சர்வக்ஞ?"*
*அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை*
*பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை (குறள்.37)*
*"குடை நிழலில் வலம் வருவாரைக் கண்டு*
*எடை போடற்க என்பயன் செய்தார் இவரென?*
*கொடையின் முன்பயனது சர்வக்ஞ" (தமிழில்: இறையான்)*

ஒன்றுபடும் இடங்கள் என்று நூலாசிரியர் சுட்டிக் காண்பித்துள்ள இப்பாடல்களை நுணுகிப்பார்த்தால், இவை வேறுபடவே செய்கின்றன என்பதை உய்த்து உணரலாம்.

சர்வக்ஞர் சைவ சமயத்தில் தம்மை இறுக்கமாகப் பிணைத்துக் கொண்டவர். திருவள்ளுவரோ எந்தச் சமயத்தையும் கண்டுகொள்ளாதவர்; எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானவர்.

பெங்களூரு அல்சூர் பகுதியில், அங்கு வாழுகின்ற தமிழர்களால் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலையைத் திறப்பதற்குக் கருநாடக அரசு

அனுமதிக்க மறுத்ததால், திருவள்ளுவர் சிலை, ஆண்டுகள் பலவாகத் திறக்கப்படாமல் கோணிப் பைகளால் மூடப்பட்டவாறு, அவல நிலையில் இருந்து வந்தது. பல்லாண்டுகளுக்குப் பின்னர், கருநாடகக் கவிஞர் சர்வக்ஞரின் சிலை சென்னையில் நிறுவப்பட்டால் பெங்களூருவில் உள்ள திருவள்ளுவர் சிலையைத் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்படும் என்று கருநாடக அரசு நிபந்தனை விதித்தது. நிபந்தனையைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டு சர்வக்ஞர் சிலையைச் சென்னையில் நிறுவியது. இப்படித்தான் திருவள்ளுவர் சிலையும், சர்வக்ஞர் சிலையும் முறையே பெங்களூருவிலும், சென்னையிலும் திறந்து வைக்கப்பட்டன.

இவைதாம் மெய்ம்மை நிலைகள் என்றாலும், வேற்றுமைகளில் ஒற்றுமை காண அவாவுகின்ற நூலாசிரியர்கள் நேர்மறையாகவே சர்வக்ஞரைத் திருவள்ளுவருடன் இசைவாகக் காண்பித்திருப்பது, **'உலகம் தழீஇயது ஒட்பம்'** என்ற வள்ளுவத்துக்கு இசைவானதே என்பதால் நூலாசிரியர்கள் பாராட்டையே பெறுகிறார்கள்.

'திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் வெறும் வழிபாட்டு நூலன்று; அனைத்து நிலைகளிலும் உள்ள உலகத் தமிழர் யாவருக்கும் எப்போதும் வழிகாட்டும் நூல் ஆகும்' என்று நூலின் தோரண வாயிலில் நூலாசிரியர்கள் கூறியிருப்பதை இந்நூலைப் படிப்போர் யாவரும் உணர்வர். வாழ்வின் இணையர் வழிகாட்டும் வள்ளுவத்திலும் இணையராக இருந்து, திருக்குறள் ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களும் திருக்குறளை எப்படி அணுக வேண்டும், எப்படி ஆய்வு செய்யவேண்டும் என்பதற்கும் வழிகாட்டுகின்ற அரிய கருவூலமாக இந்த நூலைப் படைத்திருக்கிறார்கள் என்று உளமாரப் பாராட்டி மகிழ்கிறோம். இவ்விருவரும் நூறாண்டுகளுக்கு மேல் வாழ்ந்து தமிழுக்கும் தமிழர்களுக்கும் பாடாற்ற இவர்கட்கு உறுதுணையாக இருக்குமாறு ஆகூழை இறைஞ்சி வேண்டுகிறோம்.


| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 2,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ: 10 | |

# தமிழன் அவல்

பேரா. கசுத்தூரிஇராமசாமி (ப.நி.)

**முன்னுரை**

தமிழன் உணவாகிய அவல் பற்றிய வரலாற்றையும் அவல் உணவு தமிழர் பண்பாட்டில் பெறும் இடத்தையும் இக்கட்டுரை விளக்குகிறது.

**அமெரிக்க அவல்**

கெல்லாக்ஸ் மக்காச்சோள அவல் (Kellogg's Cornflakes) கோதுமை அவல், ஓட்சு அவல் எனப் பல்வேறு வகையான அவல்கள் கடைகளில் விற்கப்படுகின்றன. இவற்றுள் ஏதாவதொன்றைப் பாலில் போட்டுச் சாப்பிட்டால் போதும். அதனைப் போன்றதொரு சத்தான காலைச் சிற்றுண்டி வேறு எதுவும் இல்லை என்று விளம்பரம் செய்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து அறிமுகம் ஆனதாலேயே அது ஏதோ புதுவகை உணவு என்று நம்மக்களும் வாங்கி உண்ணத் தொடங்கி விடுகிறார்கள்.

அமெரிக்க அவலின் வரலாறு என்ன என்பதைப் புரட்டிப் பார்ப்போம். கெல்லாக் சகோதரர்கள் மருத்துவமனை நடத்தி வந்தார்கள். அவர்களுடைய மருத்துவமனையில் நோயர்களுக்கு இறைச்சி கலவாத தானிய உணவு வகைகளை மட்டுமே வழங்க முடிவு செய்தார்கள். அதனால் கோதுமையிலிருந்து புதிய உணவுவகை தயாரிக்கும் முயற்சியில் இறங்கினார்கள். அவர்களுடைய முயற்சியால் தோன்றியதுதான் கோதுமை அவல் (Wheat flakes). அது நடந்தது 1895 ஆம் ஆண்டில். அதன் பின்னர் மூன்றாண்டுகள் கழித்து மக்காச்சோள அவலைத் தயாரிக்கும் முறையைக் கண்டனர். அதனை மேலும் சுவையூட்டி விற்கத் தொடங்கினர். அதுதான் இன்றைய உலகச் சந்தையைப் பிடித்திருக்கிறது. நம்நாட்டு மக்களையும் மயக்கி வைத்திருப்பது இந்த மக்காச்சோள அவல்தான்.

ஆக, அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகியுள்ள அவலுக்கு 200 ஆண்டுகால வரலாறுதான் உண்டு. தமிழர்கள் எப்போதிருந்து அவல் உணவைச் சாப்பிடத் தொடங்கினார்கள் என்று தெரியுமா? அறுதியிட்டுக் கூறமுடியாத அளவிற்குத் தொன்மையானது நம்நாட்டு அவல்.

**தொன்மமும், பழமொழியும்**

குசேலர் தன் நண்பனான கண்ணனுக்கு அவல் கொண்டுபோய்க் கொடுத்ததாக ஒரு தொன்மக் கதை உண்டு. நம் தமிழர் வாழ்விலும்,

'வெறு வாய்க்கு அவல்'

'வெறுவாயை மெல்லுகிறவன் அவல் கிடைத்தால் சும்மா விடுவானா?

'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பதா?'

என்றெல்லாம் பழமொழிகள் உள்ளன.

**அவல் விளக்கம்**

அவல் என்றால் பள்ளம், தட்டை என்று பொருள். தட்டையாக இருப்பதால் அவல் என்ற பெயர் பெற்றது. பச்சை நெல்லை அல்லது ஊற வைத்து உலர்ந்த நெல்லை வறுத்து மர உரலில் இட்டு விரைந்திடித்து உமியைப் போக்கினால் அது அவல் ஆகிவிடும் என்று பாவாணர் விளக்கம் அளித்துள்ளார்.

**தமிழன் அவல்**

3000 ஆண்டுகளுக்கு மேலாக நம்நாட்டில் அவல் உண்ணும் பழக்கம் இருந்து வருகிறது என்பதற்குச் சங்கப்பாடல்களே சான்றுகளாகும். தமிழன் அவல் உணவை எப்படியெப்படியெல்லாம் தயாரித்து உண்டான் என்ற தகவல்கள் அவற்றில் காணப்படுகின்றன.

இனிய கரும்புடன் அவலை வகைப்படுத்தி விற்றனர் என்று பொருநராற்றுப்படை கூறுகிறது.

"*தீங்கரும்பொடு அவல் வகுத்தோர்*" *(பொரு.217)*

உலக்கையால் இடித்து நெல்லை அவல் ஆக்கினர் என்பதை,

"*அவலெறிந்த உலக்கை*" *(29:1)*

என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது.

சிறுவர்கள் பழஞ்சோற்றை வெறுத்ததால் பெண்கள் நெல்லை உலக்கையால் இடித்து அவல் செய்து கொடுத்தனர் என்று பெரும்பாணாற்றுப்படை இயம்புகின்றது.

"*.... ..... ..... சிறாஅர்*
*பழஞ்சோற்று அமலை முனைஇ வரம்பில்*
*புதுவை வேய்ந்த கவி குடில் முன்றில்*
*அவல் எறி உலக்கை.....*" *(223 - 226)*

ஒரே மாதிரி உணவை உண்டு சலிப்படையும்போது நம் பிள்ளைகளுக்கு மாற்றுத் தின்பண்டங்களைச் செய்து கொடுப்பதுபோல அந்தக் காலத்துப் பெண்களும் செய்திருக்கிறார்கள் என்பதை மேற்காட்டிய பாடல் உணர்த்துகின்றது.

பெருவயலில் விளைந்த நெற்கதிரை முறித்துக் கொண்டுவந்த கரிய வயிரமுடைய உலக்கையால் இடித்துப் பசிய அவலைத் தயாரித்தனர். தோட்டத்திலிருந்து பசிய காய்கறிகளைப் பறித்து வந்து சமைப்பதுபோல விளைந்த கதிரை எடுத்துவந்து அவலாக இடித்தனர். மேலும் பாலில் அவலை ஊறவைத்துச் சாப்பிட்டனர் என்றும் ஒரு அகநானூற்றுப்பாடல் மூலம் அறிகின்றோம்.

"***பல் கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇ***
***கூழைக் கூந்தல் குறுந்தொடி மகளிர்***
***பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்***
***பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கை***" ***(அகம். 141 ; 15-18)***

மற்றுமொரு அகநானூற்றுப்பாடல் அவலைக் கொண்டு செய்யும் தின்பண்டத்தின் செய்முறையை (Recipe) விளக்குகிறது. செந்நெல்லை இடித்துத் தயார் செய்த அவலுடன் கரும்புப் பாகையும், பசும்பாலையும் சேர்த்துக் கலந்து உண்டனராம்.

*"இருங்கதிர் அலமரும் கழனிக் கரும்பின்*
*விளைகழை பிரிந்த அம்தீம் சேற்றொடு*
*பால்பெய் செந்நெற் பாசவல் பகுக்கும்"* **(அகம். 237; 11-13)**

ஈரமான அவலை வாயில்போட்டு மென்றுகொண்டு இளம்பெண்கள் குளிர்ச்சியான நீரில் குதித்து விளையாடினர் என்ற தகவல் புறநானூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*"..................... மகளிர்*
*பாசவல் முக்கித் தண்புனற் பாயும்"* **(புறம். 63 ; 12-13)**

**முடிவுரை**

தமிழன் தயாரித்து உண்ட அவல் உணவு கலப்படமற்றது. செயற்கையான நிறமும் மணமும் ஊட்டப்படாதது. எண்ணெயும் காரமும் சேர்க்கப்படாதது. நெகிழிப்பைகளில் அடைத்து விற்கப்படாதது. பல நாட்கள் வைத்துக்கொண்டு பல தரப்பினரும் உண்ணக்கூடிய சத்துணவாக இருக்கிறது. பச்சை அவலுடன் கரும்புப்பாகும் பசும்பாலும் இட்டுப்பிசைந்து உண்டபோது அது எவ்வளவு சுவையாக இருந்திருக்கும் பாருங்கள்! நாமும் பழந்தமிழர் மரபில் அவல் தயாரித்துச் சாப்பிட்டுப் பார்க்கலாமே! மக்கள் உணவாக இருந்த அவல் இறைவனுக்கு உகந்த உணவாகப் பின்னாளில் படைக்கப்பட்டது. கண்ணனுக்கும் கணபதிக்கும் பிடித்த படையலாக அமைந்துவிட்டது. கனியும் அப்பமும் அவலும் பொரியும் கணபதிக்குரிய படையலாக மாறிவிட்டது. இவ்வுண்மையை,

*"கைத்தல நிறைகனி அப்பமோடு அவல்பொரி*
*கப்பிய கரிமுக வடிவே நீ"*

என்று வரும் பாட்டால் தெளியலாம்.

# தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் சங்கஇலக்கிய ஆராய்ச்சிவளம்

பேரா.முனைவர் **இ.கி.இராமசாமி** (ப.நி.)

**அறிமுகம்**

மக்கட் சமுதாயம் புதுமையில் நாட்டமும் அறிவியல் கண்ணோட்டமும் சீர்திருத்த உணர்வும் கொண்டதாய் இருக்க வேண்டும் என்பது தெ.பொ.மீ. அவர்களின் விழைவு. அந்தக் கொள்கையின் அடிப்படையில் அவர் சங்க இலக்கியங்களை, மேலைநாட்டு இலக்கியங்களோடும் கொள்கைகளோடும் ஒப்பிட்டும் பொருத்தியும் பார்த்த முன்னோடி ஆவார். மேலை இலக்கியக் கலைச் சொற்களைத் தமிழாக்கம் செய்து அவற்றை விளக்கிக் காட்டியவர். ஒப்பிலக்கணம், ஒப்பிலக்கியம், மொழிவரலாறு, மொழியியல், பண்பாட்டு வரலாறு, ஆன்மிகம், இலக்கியத் திறனாய்வு என்னும் பல்துறை வல்லாண்மை பெற்றிருந்த தெ.பொ.மீ. பல்கலைச்செல்வர், குருதேவர் என்றெல்லாம் அழைக்கப்பட்டார்.

**தனித்திறன்**

சங்க இலக்கியங்களை ஆராய்ந்து பிறர் கண்டறிந்து கூறாத, புதிய முடிபுகளைத் துணிச்சலாகக் கூறியவர் என்ற சிறப்பும் அவருக்கு உண்டு. 'கலைக்கதிர்' வெளியீடாக வந்த அவருடைய 'கானல்வரி' உரைத்திறனாய்வு உயர்ந்த படைப்பு (Master Piece) எனப் போற்றப்படுகிறது.

சங்க இலக்கியங்களைக் கற்றல், கற்பித்தல், கேட்டல், புரிதல், மனங்கொள்ளல், எடுத்துரைத்தல், எழுதிக்காட்டுதல், புத்தகமாக வெளியிடுதல் ஆகிய கல்வியுளவியலை மாணவர்க்கு உணர்த்தியவர். சட்டம் பயின்றவர் ஆதலால் வழக்காடுவதுபோல இலக்கியச் செய்திகளையும் பாத்திரங்களையும் சித்திரித்து முடிவு கூறுதல் அவர் வழக்கம்.

**சீர்திருத்தம்**

சமுதாயவட்டத்தில் தந்தை பெரியாரும், கல்வியுலக ஆய்வுவட்டத்தில் தெ.பொ.மீ. அவர்களும் தமிழ்மொழியில் சீர்திருத்தம் வேண்டும் என்றார்கள். இவர்கள் இருவருந்தான் முதன்முதலில் மொழிவளர்ச்சி நோக்கில் மொழியில் சீர்திருத்தம் வேண்டும் என்று துணிவாக முன்வந்து பொறுப்புணர்ச்சியோடு கருத்துத் தெரிவித்தார்கள் என்கின்றார் பொற்கோ. (பொற்கோ (எ) பொன்.கோதண்டராமன்).

பொற்கோ இவ்வாறு மதிப்பீடு செய்தமைக்குக் காலச்சுவடுகள் கிடைக்கின்றன. ஓ.பி.இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்தபோது (1948) கல்வி அமைச்சராக இருந்த அவிநாசிலிங்கம் செட்டியார் தமிழ் எழுத்துச்

சீர்திருத்தம் செய்ய ஒரு குழுவை அமைத்தார். அதில் பேரா.கே.சாமிநாதன், டி.சொக்கலிங்கம், தெ.பொ.மீ. ஆகியோர் இடம்பெற்றனர். தட்டச்சுப்பொறி, லைனோ ஆகியவற்றில் தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தி அமைக்க அரசுக்குப் பரிந்துரைத்தனர். அதற்குள் அரசும் ஆட்சியும் மாறின, குமாரசாமி ராஜா முதலமைச்சரானார் (1949). தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தின் பெருமை பெரியார் ஈ.வெ.ரா அவர்களுக்குப் போய்விடும் என்பதால் அந்தக் குழுவின் முடிவுகள் எங்கோ எறியப்பட்டன என்று தெ.பொ.மீ. குறிப்பிட்டுள்ளார் (எழுத்துச் சீர்திருத்தம், தந்தை பெரியார், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், சென்னை, 2002, பக்.79-80). அறிவியல் கண்ணோட்டத்தோடு கூடிய முற்போக்குச் சிந்தனையும் செயற்பாடும் அடிநாட்களிலேயே தெ.பொ.மீ.யிடம் இருந்ததை அத்தகவல் காட்டுகிறது. மீண்டும் 1978-இல் பெரியார் திடலில் நடந்த கருத்தரங்கில் பழமைவாதிகளான தமிழ்ப்புலவர்களின் கருத்தை அடிப்படை அற்றது எனப் புறந்தள்ளியவரும் தெ.பொ.மீ. தான்.

கோவை பூ.சா.கோ. கலைக் கல்லூரியில் பணிபுரிந்த பேரா.கமலேஸ்வரன், தெ.பொ.மீ.யின் கையெழுத்துப் படிகளை அது தமிழாக இருந்தாலும் ஆங்கிலமாக இருந்தாலும் பிழையின்றிப் படித்துவிடுவார் என்ற தகவலும் இங்குச் சுட்டத்தக்கது.

**இழப்பு**

தெ.பொ.மீ. தமது இறுதிக் காலகட்டத்தில் 'பெட்ரண்டு ரசலும் தந்தை பெரியாரும்' என்ற தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய உரை, ஒலிநாடாவில் சரியாகப் பதிவாகாமல் போனது. அதனால் இருபெரும் ஆளுமைகள் பற்றிய அவர் கருத்துரை கிடைக்காமல் போனது ஓர் இழப்புத்தான்.

**எல்லையும் பரப்பும்**

காலமும் ஆய்வு எல்லையும் பரப்பும் கருதி தெ.பொ.மீ. அவர்களின் சங்க இலக்கியக் களஞ்சியம்வழிச் சில கருத்தியல் வளங்களைக் காண்போம். அவை மதுரைக்காஞ்சி, நற்றிணை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, முருகாற்றுப்படை, பரிபாடல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. மேலும் ப.மருதநாயத்தின் சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் என்ற ஆய்வுநூலைத் துணையாகக் கொண்டவை.

**சமநிலை**

Aristotle என்பதை அரிஸ்டாடல் என்று சரியாக மொழியாக்கம் செய்தவர் தெ.பொ.மீ. மற்றவர்கள் அரிஸ்டாடில் என்றுதான் மொழியாக்கம் செய்துள்ளனர். அந்தத் தத்துவமேதை தன்னுடைய மகனுக்காக எழுதிய அறநூலின் பெயர் நிகமேகியன் எதிக்ஸ் (Nicomachean Ethics). அது மாந்தர் வாழ்வில் இரண்டு எல்லைகள் (Two extremes) -இரண்டு முனைகள் - இருவேறு நிலைகள் உண்டு என்கின்றது. அந்த இரண்டு எல்லைகளைத் தெ.பொ.மீ. விளக்கிக் காட்டுகிறார்.

"உணவு என்றால் பட்டினி ஒருபுறம்; விலாப்புடைக்க உண்டு உருளுவது

மற்றொரு புறம். உழைப்பு என்றால் அல்லும் பகலும் உழைப்பது ஒரு கோடி; உழைப்பே இன்றிச் சோம்பித்திரிவது என்பது மற்றொரு கோடி. தேறல் (மது, கள்) அருந்துவது, உறங்குவது, காமம், துறவு என்ற பிறதுறைகளையும் இவ்வாறு இருகோடிகளாகக் காணலாம். அரிஸ்டாடல் இந்த இரு கோடியில் ஒன்றில் நில்லாமல் இரண்டிற்குமிடையே நின்று வாழும் நடுநிலை வாழ்வினையே அறவாழ்வு எனப் போற்றுகின்றார். இதனைச் சமநிலை என நம்நாட்டு மெய்யுணர்வாளர் கூறுவதோடு ஒப்பிட்டுக் காணலாம். பெருந்தூக்கமான தாமசத்திலும் வீழாமல், கடும் உழைப்பான இராசசத்திலும் வீழாமல் நடுநிலையில் இருப்பதே சாத்துவிகப் பேரின்பநிலை. இரண்டாட்டம் எந்தத் துறையிலும் உண்டு. மெய்யுணர்வாளன் இந்த இரண்டாட்டத்தினின்றும் உயர்ந்து போகிறான்" (தெ.பொ.மீ.யின் சங்கத்தமிழ், ப.230).

"இதனை உள்ளத்தில் வைத்துக் கொண்டு மதுரைக் காஞ்சியை ஓதினால் அரிஸ்டாடல் கூறும் உண்மை - நம்மவர் கூறும் சமநிலையாம் நடுநிலை நன்கு விளங்கும். வெற்றி பெறுதல் ஒன்றே வாழ்வனைத்துமாதல் வேண்டா. உலக இன்பம், அரச ஆரவாரம் இவை அனைத்திலும் நடுநிலையே சிறந்தவழி" என வாழ்த்துகிறார் மாங்குடி மருதனார் (மேலது).

**புதிரானது**

காஞ்சித்திணை இளமையும் யாக்கையும் செல்வமும் நிலையானவை அல்ல என்று கூறும். மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியில் நிலையாமையைத் தான் பாடவந்தார். ஆனால் அந்தத் தத்துவத்தை அவர் பாடிய முறைதான் புதிரானது. 'யவனர் கொண்டு வந்த தேறலை வள்ளத்தில் பெண்கள் பெய்து தர, பாண்டியனே ! நீ குடித்து நீண்டகாலம் வாழ்வாயாக' என்று பாடுகின்றார்.

காலமெல்லாம் போர் செய்து வெற்றி பெறுவதே வாழ்க்கையாகக் கொள்ள வேண்டாம். அல்லது எப்போதும் இன்ப ஆரவாரத்தில் கழிக்க வேண்டாம். அவை இரண்டிற்கும் இடைப்பட்ட நடுநிலையே, சமநிலையே நன்று என்று உணர்த்துகின்றார் மாங்குடி மருதனார்.

**மூன்று கூறுகள்**

**தெ.பொ.மீ.யின் மதுரைக்காஞ்சி ஆராய்ச்சியில் மூன்று கூறுகளைக் காணமுடிகின்றது.**

1. அரிஸ்டாடல், மாங்குடி மருதனார் ஆகியோரின் சமநிலைக் கோட்பாட்டினை ஒப்பாய்வு செய்தல்;
2. மாங்குடி மருதனார் காஞ்சித்திணையைப் புதிர்போலச் சொல்லும் தனித்திறன்;
3. பண்டைத் தமிழர் அயல்நாட்டு வாணிபத்தால் யவனத்திலிருந்து கொண்டுவரப்பட்ட தேறல் - என்ற வரலாற்றுத் தகவல்.

தெ.பொ.மீ.யின் இத்தகைய அறிவாராய்ச்சி அவரைப் பல்கலைச் செல்வராகக் காட்டுகின்றது.

**நற்றிணை பெயர் ஆராய்ச்சி**

நற்றிணைப் பெயர்க்காரணம், அதன் கட்டமைப்பு குறித்துத் தெ.பொ.மீ.யின் ஆராய்ச்சி மிகவும் புதுமையானது. சங்கப்பாடல்களை வகைதொகைப படுத்தியவர்கள், துணியை அடிக்கோலால் அளந்து வாங்குவதுபோல அவற்றின் அடியளவை எண்ணி வகை செய்தார்கள். 8 அடிக்கும் குறைந்தவற்றைக் குறுந்தொகை என்று தொகுத்தனர். 12 அடிக்கு மேல் 32 அடிக்குள் அமைந்தவற்றை நெடுந்தொகை (அகநானூறு) என்று தொகுத்தனர். இடைப்பட்டவற்றை நல்லன என்ற பொருளில் நற்றிணை என்று தொகுத்தார்கள். எனவே எட்டுத்தொகைத் தொகுப்பைக் குறுமை, நெடுமை. நன்மை என்று வைத்து நோக்கவேண்டும் என்கிறார்.

இந்த ஆராய்ச்சி மேலாய்வுக்கு இடந்தரும் களமாகும். குறுந்தொகையில் கருப்பொருட் கட்டமைப்பு மிகச் சுருங்கியதாயும், அகநானூற்றில் கருப்பொருட் கட்டமைப்பு வரலாற்றுச் செய்திகள் பலவற்றோடு விரிந்ததாயும் இருப்பதைக் காணமுடியும். நற்றிணையில் கருப்பொருட் கட்டமைப்பு அளவாக இருக்கும். திணைப்பகுப்புச் செய்யவும் எளிமையாக இருக்கும். நடுநிலையில் உள்ளவற்றைச் சிறந்ததாகக் கொள்ளவேண்டும் என்ற தெ.பொ.மீ. கருத்து மேலாய்வுக்குரியது. அப்படியே ஒப்பமுடிந்தது அல்ல.

தனிமகனார் (பாட்டு. 153), தேய்புரிப் பழங்கயிற்றியனார் (பாட்டு.284) என்ற நற்றிணைப் புலவர்கள் தாம் பாடிய பாடல்களில் வரும் அருந்தொடர்களால் பெயர் பெற்றவர்கள். அவர்களுடைய இயற்பெயரை அன்றைய தமிழுலகமே மறந்துவிட்டது என்று வருந்துகிறார் தெ.பொ.மீ.

அத்தகைய நன்றிகெட்ட காலம் இடையிடையே தோன்றுவது தமிழின் தலையெழுத்து. அத்தகைய காலங்களை அடுத்தடுத்து நன்றியுள்ள மக்களும் தோன்றி வந்துள்ளார்கள்; நற்றிணை தொகுத்த காலத்து நன்றி மறவா மக்கள், அப்பாடல்களைத் தம்மையும் மறந்து சுவைத்து அப்புலவர்கள் இட்ட இலக்கியப் பெயரையே அவர்களைக் குறிக்குமாறு சூட்டினர் என்று சொல்லி நிறை காண்கிறார். அப்படிச் சூட்டப்பட்ட பெயர்களில் ஒன்று தனிமகனார்.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

**குறிப்பு:** பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ. அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இந்த ஆண்டில் அவருடைய 'சங்க இலக்கிய ஆராய்ச்சி வளம்' குறித்த கட்டுரை நம் செந்தமிழ் இதழை அழகு செய்கிறது.

# நற்றிணையில் நீர்வளங்கள்

முனைவர் **வீ.காந்திமதி**
இணைப்பேராசிரியர் (ஓய்வு)
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

## சென்ற மாத இதழின் தொடர்ச்சி

**மீன் வேட்டம்**

நடுக்கடலுக்குள் திண்ணிய படகினைச் செலுத்தி மீன்வேட்டம் புரிந்த பரதவர் செயலை நெய்தற் பாடல்கள் பலவாறு எடுத்துரைக்கின்றன. பகல் நேரத்தில் சென்று வலைவீசிப் பிடித்து வந்த மீன் குவியலை மணலில் இறக்கி வைத்து, மீன் கொழுப்பினை நெய்யாக ஆக்கி, கிளிஞ்சலில் ஊற்றிச் சிறிய சுடரை ஏற்றி அவ்வொளியில் துயின்றனர்.

*"மீன்நெய் அட்டிக் கிளிஞ்சில் பொத்திய*
*சிறுதீ விளக்கில் துஞ்சும்"* *(நெய்.175)*

*"மீன்நிணம் தொகுத்த ஊன்நெய் ஒண்சுடர்"* *(நெய்.251)*

பரதவரிடம் மீன்கொழுப்பினைச் சேர்த்து உருக்கிய நெய்யில் விளக்கேற்றிய பழக்கம் இருந்தது என்பது இதனால் புலனாகிறது.

வலை, தூண்டில் முதலான மீன்பிடிக் கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். (நெய். 74, 199, 207)

மீன் விற்பதற்கான மீனங்காடியும் (நெய்.258) இருந்திருக்கிறது.

மீனை உப்புப் படுத்தி உலர்த்துவதைப் பரதவ மகளிர் செய்திருக்கின்றனர். அவ்வாறு உலர்த்தும் போது காக்கை முதலிய பறவைகளை விரட்டுகின்ற அவர்கள், அருகே குவிந்து கிடக்கும் உப்புக்குவியலின் மேலேறி 'எந்தை திமிலிது, நுந்தை திமிலிது' என்று கூறி ஒவ்வொன்றாக வரிசைப்படுத்தி எண்ணி விளையாடுகின்ற காட்சியை ஒருபாடல் சித்திரிக்கிறது (நெய்.331).

**உப்பு விளைவித்தல்**

"பெயினே....
*இருங்கதிர் நெல்லின் யாணர்*
*வறப்பின்....*
*இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும்"* *(நெய்.311)*

உழவுத் தொழிலும், உப்பளத் தொழிலும் நடைபெற்ற நெய்தல் நிலவளம் பற்றிக் கூறும் பாடலிது.

வான்மழையை வள்ளுவர் 'அமிழ்தம்' எனக் குறித்தார். அம்மூவனார் உப்பினைக் "கடல்விளை அமுதம்" (குறி.88) என்று பாடியுள்ளார்.

நேரிய இடத்தையுடைய உப்புப் பாத்திகளில், கடல்நீரைச் செலுத்த, அந்நீர் கடுமையான வெயிலில் கொதித்துக் கல்லாக விளைகிறது. அவ்வாறு

உழாது விளைவிக்கும் உப்பினை, உப்பு வணிகர் வாங்குவதற்கு வரும்வரை கடற்கரையில் குவடாகக் குவித்து வைத்தனர். (நெய்.331)

உப்புவணிகர் வண்டிகளில் ஏற்றிக்கொண்டு மணல் வழியில் வண்டிகளை விரைசயாகச் செலுத்தும் போது பேரொலி எழுப்புவதை,

*"கடுவெயில் கொதித்த கல்விளை உப்பு*
*நெடுநெறி ஒழுகை நிரைசெலப் பார்ப்போர்*
*அணம்போகு ஆகுலம்"* (நெய். 354)

என்ற பாடல் குறிப்பிடுகிறது.

**பண்டமாற்று**

உமணர் வணிகத்தின் பொருட்டு ஆங்காங்கே தங்கிச்செல்வர். அவ்வாறு தங்கிய சிற்றூர்களிலிருந்து அவ்வூரில் விளைந்த நெல்லை ஏற்றிக்கொண்டு நெய்தல் நிலத்துக்குப் புறப்படும்போது, ஊர்மக்கள் உமணரைப் பிரிய ஒன்னாது வருந்துவர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்"[6] என்றவாறு அன்புடன் பழகியதால் அவ்வூரில் விளைந்த நெல்லைத் 'தம் நாட்டு நெல்' என்று உரிமையுடன் கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. மேலும் நெல்லை விற்று உப்பு வாங்கிய பண்டமாற்று வணிகத்தையும்,

*"தம்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து*
*பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி"* (நெய்.183)

என்பதனை இப்பாடலடிகளில் அறியமுடிகிறது. மேலும் கடல் நிலத்தில் விளைந்த உப்புக்குவியலை வண்டிகளில் ஏற்றி மலைநாட்டு ஊர்களில் விலைகூறி விற்றுள்ளனர். (நெய்.138)

**கடல் வணிகம்**

வேறுவேறு நாடுகளிலிருந்து காற்றுச்செலுத்த வந்த நாவாய்களிலிருந்து இறக்குமதி செய்யப்பெற்ற பல்வேறு பொருட்கள் பல தொழில்களை மேற்கொள்வதற்காகப் பயன்பட்டன. அவ்விறக்குமதிப் பொருட்கள் மணலில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

*"வேறுபல் நாட்டில் கால்தர வந்த*
*பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறை"* (நெய்.295)

*"பலவுறு பண்ணியம் இழிதரு நிலவுமணல்"* (நெய்.31)

இப்பாடற் செய்திகளால் கடல் வணிகத்தில் தமிழர்கள் சிறந்திருந்தனர் என்பது புலனாகிறது.

**பொற்கொல்லர் தொழில்**

நெய்தல் நிலத் தலைவி தலைவனோடு விளையாடியபோது, அவளது காற்சிலம்பு உடைந்துபோயிற்று. பொற்கொல்லர், பொறி அற்றுப் போன அணிகலனை இணைத்துச் சந்து ஊதிக் கூட்டுதற்கு மண் கட்டுவர். அதனால் கடற்கரைத் துறைமணலைக் கொண்டு வருமாறு தலைவனிடம் கூறும் பாடலில் (நெய்.36) பொற் கொல்லரது தொழிலுக்கு நீர்நிலை மணல் பயன்பட்டது தெரிகிறது.

*"கைவல் கம்மியன் கவின்பெறக் கழாஅ*
*மண்ணகப் பசுமுத்து"* *(நெய்.94)*

முத்தினைக் கழுவி அணி செய்யும் கம்மியர் தொழில் இதனால் புலப்படுகிறது.

*"முத்துப்படு பரப்பின் கொற்கை சின்முன்துறை"* *(குறி.23)*

முத்துக் குளித்தல் தொழில் பற்றி நற்றிணையில் வெளிப்படையாகக் குறிக்கப்பெறவில்லை. முத்து பரவிக்கிடக்கிற துறை என்றதனால் அத்தொழில் நடைபெற்றது தெரிகிறது.

**வாழ்வியற் கூறுகள்**

ஆண்மைப் பேராற்றலை வெளிப்படுத்துவன புறஇலக்கியங்கள் என்றால், பெண்மையின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவை அக இலக்கியங்கள். அகப் பாடல்கள் அக்காலச் சமுதாய ஒழுக்கம், பண்பாடு, வாழ்வியல் நெறி ஆகியவற்றை அறியத் துணை செய்கின்றன. நீர்நிலைப் பின்புலத்தில் வாழ்வியற் கூறுகளை இங்குக் காண்பது பொருத்தமுடைத்து.

**பலர்கொள் பலகை**

மருதநிலத் தலைவியின் ஊடலுக்குக் காரணம் தலைவனின் பரத்தமை ஒழுக்கமே ஆகும். இவ்வொழுக்கத்தை அறவே தடுக்கவில்லை என்றாலும் கேலியும் கிண்டலுமாக அவ்வொழுக்கச் சீர்கேட்டினைப் பலபாடல்கள் பகர்கின்றன.

நடுக்கடலில் புயல்காற்று வீசியதால், மரக்கலம் கவிழ்ந்து விட அதில் பயணம் செய்தோர் மிதந்துவரும் பலகையைப் பற்றிக் கொண்டு, தாம் தாம் தனித்தனி இழுப்பர். இப்படிப் பலர்கொள் பலகைபோலப் பரத்தையர் பலரால் இழுக்கப்படும் தலைவனை இடித்துரைத்து அவ்வொழுக்கச் சீர்கேட்டினைக் கண்டிக்கிறாள் தோழி (மரு.30).

**நும்மிலும் சிறந்தது நுவ்வை**

தலைவியின் அன்னை சிறியவளாக இருந்தபோது, விளையாட்டு ஆயத்தாரோடு கடற்கரை மணலில் புதைத்த புன்னை விதை, முளைத்து வர, அதற்கு நெய்யும் பாலும் விட்டு வளர்த்துவந்தாள். வளர்ந்து நின்ற புன்னை மரத்தை அன்னை, 'உனது தமக்கை' என்று சொல்லிச் சொல்லி மகளான தலைவியை வளர்த்தாள். இப்போது அதே புன்னை மர நிழலில் தலைவனைச் சந்தித்த நிலையில், தமக்கையின் முன்னிலையில் தலைவனுடன் நகையாடுதற்கு வெட்கப்படுவதாகக் கூறிச் சந்திப்பினைத் தடுக்கின்றாள் தலைவி.

*"நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று*
*அன்னை கூறினள் புன்னையது நலனே*
*அம்ம நாணுதும் நும்மொடு நகையே"* *(நெய். 172)*

கடற்கரையின்கண் நிகழும் இந்நிகழ்ச்சி, காதலுக்குக் கட்டுப்பாடுகளை விதித்துப் பண்பாட்டினை நிலைநிறுத்துகின்றது. அத்துடன் மரத்தை உயிராகவும்

உறவாகவும் கருதுகின்ற இயற்கையை நேசிக்கும் மக்களையும், இயற்கையோடு இரண்டறக் கலந்த அவர்களது வாழ்க்கையையும் எடுத்துரைக்கிறது.

**அருவியும் சுனையும்**

கரும்புலியைத் தாக்கிக் கொன்ற யானையின் தந்தத்தில் குருதி படிந்தது. செம்மருவாக ஆன தந்தத்தை அருவி நீரில் கழுவிக் கொண்ட மலைப்பகுதி அது. அம்மலைச்சாரலில் களவில் கடுவனோடு இணைந்த மந்தி, தன் சுற்றத்துக்கு அஞ்சி வேங்கை மரக் கிளையில் ஏறி, கீழே ஆழத்தில் கிடக்கின்ற சுனைநீரை நோக்கித் தலைகவிழ்ந்து பார்த்து, தன் மெல்லிய தலையில் குலைந்த உச்சிமயிரைத் திருத்தியது. இக்காட்சிப் புனைவு குறிஞ்சிப் பாடல் 151 இல் இடம்பெற்றுள்ளது.

மந்தியின் செயலானது, தலைவி களவுக்காதலை உற்றாருக்குத் தெரியாமல் மறைக்கும் செயலுக்கு உள்ளுறையாகிறது. இக்காலத்தும் காதலர்கள் தம் காதலை மற்றவர்க்குக் குறிப்பாக உறவினர்க்குத் தெரியாதவகையில் மறைக்க முயல்வது யாவரும் அறிந்த வாழ்வியற் கூறு.

புலியை அதன் குகைக்கே சென்று கொன்று, படிந்த கரையைக் கழுவுகின்ற யானையின் செயலானது, தலைவன் தன் சுற்றத்துடன் தலைவியின் ஊருக்கு வந்து அவளை மணம் பேசி ஊரார் பேசிய அலர் என்னும் பழிமொழியை அழிக்க வேண்டும்; களவில் சேர்ந்த குற்றத்தை அவளைத் திருமணம் செய்து போக்கவேண்டும் என்ற சிந்தனையை வழங்குகிறது.

காதல், திருமணத்தில் நிறைவுபெற வேண்டும். 'திருமணம்' தமிழ்ச் சமூக மதிப்புகளின் அடையாளமாக என்றென்றும் நிலைபெற்று விளங்குவது என்ற கருத்திற்கு இப்பாடல் சான்றாகிறது.

சுனைநீர் சுற்றத்தையும், அருவிநீர் சமுதாயத்தையும் உணர்த்தி நிற்கும் இப்பாடலானது, திருமணம் புரிந்து இல்லறம் போற்றுதலே நல்லறம் என்ற வாழ்வியற் பண்பாட்டைப் பகர்கிறது.

**முடிவுகள்**

வாழ்வு ஆதாரங்களாக விளங்குபவை நீர் வளங்கள் என்ற உண்மை கண்டறியப் பெற்றது.

நீர் நிலைகளில் கங்கையாறும், நீர்வாழ் உயிரினங்களில் தவளை, முதலை முதலானவையும் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

நில வளங்களை விளக்குவனவாக அமைந்த நீர்நிலைத் தொழில்களில் பொற்கொல்லர் தொழிலும் குறிக்கப்பெற்றுள்ளது.

நற்றிணைப் பாடல்களில் பின்புலமாக அமைந்த நீர்நிலைப் புனைவுகள் தூய்மையான காதலும் மேன்மையான இல்லறமும் சமுதாயப் பண்பாட்டிற்கு அடிகோலுவன என்ற சிந்தனையை விதைப்பனவாக உள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. புறநானூறு, 2: 16.
2. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.21.
3. திருக்குறள், எண்.20.
4. மேலது, எண்.20.
5. புறநானூறு, 18:19-30.
6. மேலது, 192:1

# கடிதம்

பெருமதிப்பிற்குரிய செந்தமிழ் இதழ் பொறுப்பாசிரியர் பெருந்தகை அவர்கட்கு!

வணக்கம், புதுப்பொலிவுடன் புத்தாக்கம் கட்டுரைகளும் தொடர்ந்து வரும் பாராட்டுக்குரிய செந்தமிழ் - தங்களின் முயற்சியாம் கைவண்ணத்தால் திங்கள்தோறும் இதழ்ப் பளபளப்புடன் மணக்கிறது.

*செந்தழ் பேசும்*
*மதுரைத் தமிழ்ச்சங்கச்*
*செந்தமிழ் பேர்கொள்*
*சீரிதழ்தான் - நந்தம்*
*சதாசிவப் பற்றாளர்*
*பார்வையால் நல்ல*
*பதாகையாம் மாமது*
*ரைக்கு!*

*வாழிய பாஸ்கர சேதுபதி சீர்புகழ்!*
*சூழிய பாண்டித் துரையோடே! - ஊழி*
*வழிவழி யாகத் தமிழ்ச்சங்க வாழ்வு*
*கழிநெடில்போல் வாழ்க வளர்ந்து!*

அன்பன்

**தெ.முருகசாமி**

# சங்கச் செய்திகள்

மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வளாகத்தில் 05.07.2016 அன்று முற்பகல் படைப்பாளர் கு.அழகிரிசாமி அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைப்பெற்றது. அன்னாரது படைப்புப்பணி குறித்து கல்லூரி முதல்வர் முனைவர் சு.விஜயன் அவர்கள், இளங்கலை மூன்றாமாண்டு மாணவர் சு.பூபதிராஜ், இளம் இலக்கியம் இரண்டாமாண்டு மாணவி த.தோகைலட்சுமி ஆகியோர் மாணவ மாணவிகளுக்கு எடுத்துரைத்தார்கள். பேராசிரியர்களும் கல்லூரி மாணவ மாணவிகளும் திரளாகக் கலந்துக்கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் வளாகத்தில் 06.07.2016 அன்று முற்பகல் மயிலை சிவமுத்து அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. அன்னாரது தமிழ்ப்பணி குறித்து துணைமுதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள், இளம் இலக்கியம் மூன்றாமாண்டு மாணவர்கள் பா.சிவபாலன், தெ.பொன்.அமிர்தவள்ளி ஆகியோர் மாணவ மாணவிகளுக்கு எடுத்துரைத் தார்கள். பேராசிரியர்களும் கல்லூரி மாணவ மாணவிகளும் திரளாகக் கலந்துக் கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் வளாகத்தில் 11.07.2016 அன்று முற்பகல் தமிழறிஞன் இரா.இராகவையங்கார் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. அன்னாரது தமிழ்ப்பணி, பதிப்புப்பணி, செந்தமிழ் இதழாசிரியர் பணி படைப்புப்பணி குறித்து பேராசிரியர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள், முனைவர் பா.நேருஜி அவர்கள், இளங்கலை மூன்றாமாண்டு மாணவி பா.ஸ்ரீதேவி, இளங்கலை முதலாமாண்டு மாணவர் வீ.அதிவீரபாண்டியன் ஆகியோர் மாணவ மாணவிகளுக்கு எடுத்துரைத்தார்கள். பேராசிரியர்களும் கல்லூரி மாணவ மாணவிகளும் திரளாகக் கலந்துக்கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

---

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் வளாகத்தில் 19.07.2016 அன்று முற்பகல் சுவாமி விபுலானந்தர் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. அன்னாரது ஆன்மீகப்பணி, தமிழ்ப்பணி குறித்து பேராசிரியர் முனைவர் மா.செல்வத்தரசி அவர்களும் பேராசிரியர் முனைவர் ஜெ.கோகிலா அவர்களும், முதுகலை இரண்டாமாண்டு மாணவர்களாகிய நா.சுரேஷ், மு.கருப்புராஜா ஆகியோர் மாணவ மாணவிகளுக்கு எடுத்துரைத்தார்கள். பேராசிரியர்களும் கல்லூரி மாணவ மாணவிகளும் திரளாகக் கலந்துக்கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் வளாகத்தில் 19.07.2016 அன்று முற்பகல் வழக்குறைஞர் மா.சங்கரபாண்டியனாரின் 10ஆம் ஆண்டு நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ம.திருமலை அவர்கள் தலைமை ஏற்று அன்னாரின் சட்டப்பணி குறித்தும் தமிழ்ச்சங்க வளர்ச்சிக்கும், கல்லூரி வளர்ச்சிக்கும் பாடுபட்ட அவரின் செயல்பாடு குறித்த கருத்துக்களைப் பற்றி தலைமையுரையாற்றினார்.

நினைவுரையில் மேனாள் உறுப்பினர் சிங்காரவடிவேலு அவர்கள் அன்னாரின் இளமைக்கால நினைவுகளையும் சட்டக்கல்லூரி பயிலும் காலத்தில் அவர் பழகும் விதம் குறித்தும் வழக்குறைஞர் பணியில் அவர் ஆற்றிய பணியையும் மிகச்சிறப்பாக எடுத்துரைத்தார்.

திரைப்பட பாடலாசிரியரும் முன்னாள் தமிழக அரசவைக் கவிஞருமான முத்துலிங்கம் தம் சிறப்புரையில் உலக அளவில் இலக்கிய, இலக்கண வளம் மிக்க செம்மொழி அந்தஸ்துடைய ஆறு மொழிகளில் தமிழும், சீனமும் மட்டுமே இன்றும் உயிர்ப்புடன் உள்ளன என்பதையும், மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் மூலம் தமிழின் பெருமையை வழக்குறைஞர் சங்கரபாண்டியனார் போன்றோர் பாதுகாத்துள்ளனர். அதை நாம் தொடரவேண்டும் என்றார். இந்நிகழ்வுக்கு நான்காம் தமிழ்ச்சங்கச் செயலாளர் முன்னிலையுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் வரவேற்புரை நல்கினார். துணைமுதல்வர் நன்றியுரை யாற்றினார். நான்காம் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் முகவை மன்னர் ந.குமரன் சேதுபதி அவர்களும், கல்லூரிச் செயலாளர் ந.இலட்சுமி குமரன் சேதுபதி அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு அன்னாரின் உருவபடத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். பேராசிரியர்களும் கல்லூரி மாணவ மாணவிகளும் திரளாகக் கலந்துக்கொண்டு அன்னார்க்கு மரியாதை செலுத்தினர்.

---

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் வளாகத்தில் 21.07.2016 அன்று முற்பகல் வேதநாயகம்; பிள்ளை அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. அன்னாரது தமிழ்ப்பணி குறித்து பேராசிரியர் முனைவர் நந்தினி அவர்களும் பேராசிரியர் முனைவர் பெ.இந்துராணி அவர்களும் இளம் இலக்கியம் மாணவர் இரா.விக்னேஷ் ஆகியோர் மாணவ மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். பேராசிரியர்களும் கல்லூரி மாணவ மாணவிகளும் திரளாகக் கலந்துக்கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் வளாகத்தில் 23.07.2016 அன்று முற்பகல் சுதந்திர போராட்ட தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு

சிறப்பாக நடைபெற்றது. அன்னாரது விடுதலைப் போராட்டப்பணி மற்றும் தியாகப்பணி குறித்து பேராசிரியர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்களும், பேராசிரியர் முனைவர் சு.மலர்விழி அவர்களும் இளம் இலக்கியம் மாணவி செ.செல்வராணி ஆகியோர் மாணவ மாணவிகளுக்கு எடுத்துரைத்தார்கள். பேராசிரியர்களும் கல்லூரி மாணவ மாணவிகளும் திரளாகக் கலந்துக்கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் வளாகத்தில் 27.07.2016 அன்று முற்பகல் இந்திய ஏவுகனை நாயகன் டாக்டர் ஆ.பெ.ஜெ.அப்துல் கலாம் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. அன்னாரது அறிவியல் தொழில் நுட்பப்பணி மற்றும் மாணவர்களின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய உரைகள் குறித்தும் முதல்வர் முனைவர் சு.விஜயன் அவர்களும் துணைமுதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்களும், பேராசிரியர் முனைவர் பா.நேருஜி அவர்களும் இளங்கலை முதலாமாண்டு மாணவர் வீ.அதிவீரபாண்டியன் ஆகியோர் மாணவ மாணவிகளுக்கு எடுத்துரைத்தார்கள். பேராசிரியர்களும் கல்லூரி மாணவ மாணவிகளும் திரளாகக் கலந்துக்கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

---

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் வளாகத்தில் 29.07.2016 அன்று முற்பகல் கவிஞர் ஞானகூத்தன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் சு.விஜயன் அவர்களும் துணை முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்களும் அன்னாரது கவிப்புலமை, படைப் பாற்றல், சமுதாய நோக்கு குறித்த கருத்தினை மையமிட்டு உரையாற்றினார்கள். பேராசிரியர் முனைவர் மா.செல்வத்தரசி அவர்கள் அன்னாரது தமிழ்ப்பணி, ஆளுமைப்பண்பு, கவித்துவம் மற்றும் கவிதை படைப்புகளின் சிறப்பு குறித்தும் ஞானகூத்தனின் வேண்டுகோளாக "எழுத்தாளர்களைக் கொண்டாட வேண்டுமென்றும், யானை மீது அமர வைத்து ஊர்வலமாக அழைத்து வரவேண்டும்" என்ற அவரின் கருத்தினை வலியுறுத்தி பேசினார். மேலும் இன்றைய கவியுலகில் முதன்மை கவிஞராகவும், திருமந்திரம் ஏற்படுத்திய தாக்கத்தால் தமது இயற்பெயராகிய அரங்கநாதன் என்ற பெயரை ஞானகூத்தன் என்றும் மாற்றிக்கொண்டார். சங்க இலக்கியத்தின் ஆழத்தை உள்வாங்கிய தன்மை அவரது நவீன கவிதைகளில் வெளிப்படுகின்றன. அவரது தலையாய ஆளுமைப் பண்புகளில் ஒன்றாக சமகால அரசியிலின் முகமூடியை கிழித்தெறிவதேயாகும். மரபு இலக்கியத்தில் ஆழ்ந்த புலமை சமஸ்கிருத ஆளுமையில் வெளிப்படுகிறது. 'கல்வி', 'கசடதபற', 'கணையாழி', 'ழ' இவ்விதழ்களில் பதிப்பாசிரியராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

சூரியனுக்குப் பின்பக்கம், கடற்கரையில் சில மரங்கள், மீண்டும் அவர்கள், பென்சில் படங்கள் ஆகிய கவிதை தொகுப்புகள் வெளிவந்துள்ளன. மேலும் 1998இல் ஞானகூத்தனின் கவிதை தொகுப்பு வெளியாகியுள்ளது. 2010இல் சாரல் விருதையும், 2014இல் விஷ்ணுபுரம் என்ற விருதையும் பெற்றவர் என்பது குறித்து உரையாற்றினார்.


இளம் இலக்கியம் மூன்றாமாண்டு மாணவி தெ.பொன்.அமிர்தவள்ளி தம் கருத்துரையில் அன்னாரது வாழ்வியல் குறித்தும் நவீன கவித்துவம் குறித்தும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். பேராசிரியர்களும் கல்லூரி மாணவ மாணவிகளும் திரளாகக் கலந்துக்கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

---


மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் வளாகத்தில் 31.07.2016 அன்று முற்பகல் டாக்டர் மு.கோவிந்தசாமி அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர் முனைவர் ஜெ.கோகிலா அவர்கள் அன்னாரைப் பற்றி, திருக்குறள் செம்மல் என்று அழைக்கப்படும் இவர் மக்களிடையே திருக்குறள் குறித்த கருத்துக்களை எடுத்துக் கூறுவதனை தமது தலையாயப் பணியாக மேற்கொண்டார். இவரது திருக்குறள் குறித்து எழுதப்பட்ட 13 நூல்களும் சிறப்புப் பெற்றவை. அவற்றை சிறப்பிக்கும் பொருட்டு சென்னை மாநகரில் இவரது நூல்களை யானைமேல் ஏற்றி வலம் வரச்செய்யப்பட்டது. மேலும் 1996ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருதும் இவருக்கு வழங்கப் பட்டது என்பது உள்ளிட்ட கருத்துக்களை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். பேராசிரியர்களும் கல்லூரி மாணவ மாணவிகளும் திரளாகக் கலந்துக்கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

---


# ஆகஸ்ட் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்




கவிஞரேறு வாணிதாசன்
(ஆகஸ்ட் 7)




நாமக்கல் கவிஞர்
வெ.இராமலிங்கம் பிள்ளை
(ஆகஸ்ட் 24)




ய.சு.செங்கல்வராயபிள்ளை
(ஆகஸ்ட் 25)



தெ.பொ.மீனாட்சி சுந்தரம்
(ஆகஸ்ட் 27)



அ.ச.ஞானசம்பந்தனார்
(ஆகஸ்ட் 27)



தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்
(ஆகஸ்ட் 31)


பதிப்பாசிரியர்: பேரா. இரா.சதாசிவம்

## ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. இரா.இளங்குமரன்

முனைவர் திரு. அ.அ.மணவாளன்
முனைவர் திரு. இராமசுந்தரம்
முனைவர் திரு. ம.திருமலை
முனைவர் திரு. இ.மறைமலை
முனைவர் திரு. பெ.சுயம்பு
முனைவர் திரு. செ.கந்தசாமி
முனைவர் திரு. முருகரத்தனம்
முனைவர் திரு. கு.வெ.பாலசுப்பிரமணியன்
முனைவர் திரு. மு.மணிவேல்
முனைவர் திரு. ம.பெ.சீனிவாசன்
முனைவர் திரு. இ.கி.ராமசாமி
முனைவர் திரு உ.கருப்பத்தேவன்

RNI Regd. No.5508/56 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் சு.விஜயன்**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கம் சாலை,
மதுரை - 625 001.

From
**THE SECRETARY**
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், காமராஜர்சாலை, மதுரை-625 009.